



# தினப்புயல்

THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –407



## அரச பயங்கரவாதத்தினால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன்



## சுய இலாப அரசியலுக்காக நடத்தப்படும் தொழிற்சங்க போராட்டம் – திரைமறைவில் நடப்பது என்ன?



## ஜெனீவா தீர்மானங்கள் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுத்தருமா?



## உள்ளூராட்சி மன்ற தேர்தலும் ரணிலின் ஏமாற்று அரசியலும்



# அரச பயங்கரவாதத்தினால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன்

பிரபாகரனின் இளைய மகன் தொடர்பில் நான் ஊடகங்களுக்கு பல தடவைகள் தெளிவுபடுத்தியுள்ளேன். இரண்டு படங்களை நானும் பார்த்தேன். என முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். கொழும்பு நாளிதழுக்கு வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.யாரை கொலை செய்தாவது போரை முடி என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த போதிலும் 2 இலட்சம் மக்களை பாதுகாப்பாக மீட்டெடுக்கும் சவாலில் களமிறங்கினோம். ஆனால் போர் வெற்றியை தனதாக்கிக் கொள்வதற்காக என்னையும் மீறி கனிஷ்ட நிலை அதிகாரிகளுக்கு பாதுகாப்பு செயலாளர் கட்டளையிட்டார். இதனால் தான் போர் குற்றப் பிரச்சினைகளும் வெள்ளைக் கொடி விவகாரமும் ஏற்பட்டது

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் செவ்வி பின்வருமாறு.

**இறுதிக்கட்ட போர் தொடர்பில் பாராளுமன்ற உரையில் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை முன் வைத்தீர்கள். உண்மையில் போரின் இறுதி கருணங்களில் நடந்தது என்ன?**

இறுதிக்கட்ட போர் தொடர்பில் நான் குற்றச்சாட்டுக்களை செய்யவில்லை. மே மாதம் 11 ஆம் திகதியில் இருந்து மே மாதம் 17 ஆம் திகதி வரையில் நான் நாட்டில் இருக்கவில்லை. இதனை பெரிய ஒரு விடயமாக காண்பித்து அப்போதைய ஆட்சியாளரும் அவரது பாதுகாப்பு செயலாளரும் இறுதிக்கட்ட போரை அவர்கள் முன்னெடுத்ததாக வெளிப்படுத்த முற்பட்டனர். ஆனால் ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு பின்னர் நாங்கள் புது மாத்தளனை கைப்பற்றியதன் பின்னர் விடுதலை புலிகள் களப்பு மற்றும் கடல் பகுதிற்குள் ஒன்றரை கிலோமீற்றர் அகலம் மற்றும் 15 கிலோ மீற்றர் வரை நீளமான நிலப்பரப்பிற்குள் சிறைப்பட்டனர். இதன் பின்னர் உண்மையில் அந்த போரை ஜெனரல் தர அதிகாரிகள் நெறிப்படுத்த வேண்டிய தேவை காணப்படவில்லை. சாஜன்ட் மற்றும் கோப் ரல் தரத்திலானவர்களே போரை முடிவிற்கு கொண்டு வந்தனர். நாட்டில் நான் இல்லை என்பதற்காக ராஜபக்ஷர்களுக்கு செய்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை என நான் குறிப்பிட்டேன். இதன் பின்னர் வெள்ளைக் கொடி வழக்கு தொடர்பாக நான் கூறினேன். நடேசன் மற்றும் புலித்தேவன் போன்றவர்கள் சரணடைய வந்த போது கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டது. இவ்வாறு தான் பரந்தளவில் பேசப்பட்டது. ஊடகங்களிலும் கூறப்பட்டது. நானும் கேள்விப்பட்டேன். எனவே தான் இது தொடர்பில் உரிய வகையில் விசாரணை முன்னெடுக்க வேண்டும் என நான் கூறுகின்றேன். ஏனென்றால் சரணடைபவர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் செய்யக் கூடாது என நான் கட்டளையிட்டிருந்தேன். அவ்வாறு சரணடைய வருபவர்களை பொறுப்பேற்று பாதுகாக்க வேண்டும் என்பதை நான் தெளிவாகவே கட்டளையிட்டிருந்தேன். இதனடிப்படையில் தான் சரணடைந்த 12 ஆயிரம் பேரை பொறுப்பேற்று பாதுகாத்தோம். புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோருக்கு சரணடைய வேண்டிய தேவை காணப்பட்டதாக பரவலாக பேசப்பட்டது. சர்வதேச ஊடகவியலாளர் ஒருவருடன் இது குறித்து பேசப்பட்டு பின்னர் அவர்கள் பஷில் ராஜபக்ஷவுடன் இவர்களின் சரணடைவு தொடர்பில் பேசியுள்ளனர். இதற்கு பின்னர் என்ன நடந்தது என்பது தொடர்பிலும் புலிதேவன் மற்றும் நடேசன் சரணடைய வந்த நிலையில் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் காணப்பட்டது. எனவே இது குறித்து கட்டாயமாக விசாரணை செய்யப்பட வேண்டும். யாராவது தவறான கட்டளையை வழங்கினார்களா? அவ்வாறு வழங்கியிருந்தால் ஏன் வழங்கினார்கள்? என்பது குறித்து விசாரிக்கப்பட வேண்டும்.

**போரின் இறுதி ஒரு வார கால பகுதியில் நீங்கள் நாட்டில் இருக்க வில்லை என்று கூறியுள்ளீர்கள். அவ்வாறாயின் இறுதிக்கட்டப் போரை முன்னெடுப்பது தொடர்பில் இராணுவத்திற்கு கட்டளையிட்டது யார்?**

மே மாதம் 11 ஆம் திகதியில் இருந்து மே மாதம் 17 ஆம் திகதி இரவு 9 மணி வரை நான் நாட்டில் இருக்கவில்லை. ஆனால் இராணுவத்திற்கு கட்டளையிட்டது நான். எனது கட்டளையின் கீழ் போரை நெறிப்படுத்திய அதிகாரிகள் என்னுடன் சீனாவிற்கு சென்றிருந்தனர். புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான வரைபு படங்கள் உள்ளிட்ட தேவையான அனைத்து உபகரணங்களையும் எடுத்து சென்றிருந்தோம். ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் களத்தில் இருந்த தளபதிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். தேவையான ஆலோசனைகளை வழங்கினேன். கொழும்பில் இருந்து எவ்வாறு போரை நெறிப்படுத்தினேனோ அதேபோன்று சீனாவில் இருந்தும் நெறிப்படுத்தினேன்.

**கொழும்பு – சீனா என்று எனக்கு வேறுபடவில்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மே மாதம் 19 ஆம் திகதி வரை உயிருடன் இருந்ததாக நீங்கள் தெரிவித்துள்ளீர்கள். அதனை எவ்வாறு உறுதிப்படக் கூறினீர்கள் ?**

மே மாதம் 19 ஆம் திகதி வரை போர் இடம்பெற்றது. உயிருடன் இருந்து கொண்டு அவர் எமக்கு எதிரான போரை முன்னெடுத்தார். 19 ஆம் திகதி போர் முடிந்த பின்னர் தான் நந்திக்கடல் களப்பில் வடக்கு மூலையில் இருந்து துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் அவரது உயிரற்ற உடல் எமக்கு கிடைத்தது. அதாவது 19 ஆம் திகதி பகல் 11 மணியளவில் தான் போர் முடிந்து விட்டது. பிரபாகரனின் சடலம் கிடைத்து விட்டது என அங்கிருந்து எனக்கு தகவல் கிடைத்தது. ஆகவே பிரபாகரன் இறுதி வரை களத்தில் இருந்து போர் செய்தமையை என்னால் உறுதிப்படக் கூற முடியும். 19 ஆம் திகதி 11 மணியளவில் தான் பிரபாகரன் களத்தில் உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் குடும்பம் மற்றும் அவரது இளைய மகன் உயிரிழப்பு தொடர்பில் இராணுவத்திற்கு எதிராக குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றது. பிரபாகரனின் இளைய மகன் தொடர்பில் நான் ஊடகங்களுக்கு பல தடவைகள் தெளிவுபடுத்தியுள்ளேன். இரண்டு படங்களை நானும் பார்த்தேன். ஒரு படத்தில் சாரம் ஒன்றை போர்த்திக் கொண்டு பங்கரில் இருப்பது போன்று உள்ளது. அந்த பங்கரை இராணுவத்தினது என்று கூற முடியாது. ஏனென்றால் அந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளும் பங்கரில் தான் இருந்தனர். பிரபாகரனின் மகன் கைது செய்யப்பட்டிருந்தால் அவ்வாறு பங்கரில் இருக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. குறைந்தபட்சம் வவுனியாவில் உள்ள முகாம் ஒன்றிற்காவது கொண்டு வந்திருப்போம். இராணுவ நடவடிக்கைகளின் போது முன்னிலையில் இருந்து போரிடுபவர்கள் தான் இவ்வாறு பங்கர்களில் இருப்பார்கள். எனவே நிலைப்பாடு யாதெனில் அது விடுதலைப் புலிகளின் பங்கர். அதில் தான் இளைய மகன் இருந்துள்ளார். ஏனென்றால் விடுதலை புலிகளின் தலைவர்களும் பங்கர்களில் தான் இருந்தனர். அவர் போர்த்திக் கொண்டிருந்த சாரம் கூட அந்த பகுதி மக்கள் பயன்படுத்தும் ஒன்று. அவ்வாறான சாரங்கள் முகாம்களில் இல்லை. இராணுவத்திடமும் இல்லை. எனவே பிஸ்கட் ஒன்றை சாப்பிட்டு கொண்டு அந்த பங்கரில் இருக்கின்றமை இதிலிருந்து வெளிப்படுகின்றது. அவர்கள் இறுதியில் பங்கர்களில் தான் இருந்தனர். அவரது குடும்பமும் கூட இருந்து இருக்கலாம். பிரபாகரனும் இருந்து இருக்கலாம். மற்றப் புகைபடத்தில் துப்பாக்கி சூடுபட்டு கீழே கிடந்தார். எனவே எப்படி சுடப்பட்டார்? எங்கு வைத்து சுடப்பட் டார்? என்பது தொடர்பில் எமக்கு பிரச்சினை உள்ளது. உதாரணமாக 16 ஆம் திகதி இரவு நந்திக்கடல் களப்பை சுற்றி மூன்று பாதுகாப்பு வலயங்களை நான் போட்டிருந்தேன். விடுதலை புலிகள் இந்த பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு முல்லைத்தீவு காட்டுக்குள் செல்வதற்கு முற்பட்டனர். முதலாவது பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது உயிரிழந்தவர்களின் சுமார் 75 சடலங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டது. இதன் போது சில சடலங்களை எம்மால் எடுக்க முடியாமல் போயிருக்கலாம். களப்பில் விழுந்திருக்கலாம் சூட்டுக் காயங்களுடன் சிலரை தூக்கியும் சென்றிருக்கலாம். அந்த இடத்தில் பிரபாகரனின் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் இருந்தார்கள் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குள்ளது. பாதுகாப்பு வலயங்களை உடைத்து கொண்டு பிரபாகரனின் குடும்பத்தினருடன் முல்லைத்தீவு காட்டிற்குள் செல்வதற்கே விடுதலை புலிகளின் போராளிகள் முற்பட்டனர். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இளைய மகன் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகியும் இருக்கலாம். எனவே அந்த புகைப்படங்கள் இராணுவ முகாம் ஒன்றில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டதாக கூற இயலாது. உயிரிழந்திருக்கலாம். அவ்வாறான படங்களை எடுக்கவும் முடியும். ஆனால் அந்த படங்கள் உண்மை என்றால் பாதுகாப்பு வலயங்களை உடைக்க முற்பட்ட போது இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் உயிரிழந்திருக்கலாம்.

ஏனென்றால் பாதுகாப்பு வலயங்களை உடைத்துக் கொண்டு முன்னோக்கி நகர முற்படுகையில். அதாவது 17 ஆம் திகதி இரவு அவர்கள் களப்பு பகுதியில் வட திசைக்கு வந்து எமது பாதுகாப்பு வலயங்களை உடைத்து புதுமாத்தளன் பக்கம் செல்வதற்கு முற்பட்டனர். அந்த இடத்தில் தான் சாள்ஸ் அன்டனி உட்பட 200 மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இதன் போது இடம்பெற்ற போர் 17 ஆம் திகதி இரவு 2.30 மணியிலிருந்து மறுநாள் அதாவது 18 ஆம் திகதி பகல் 1 மணி வரை நீடித்தது. இங்கு தான் 200 பேர் வரை கொல்லப்பட்டனர். பிரபாகரனும் இந்த இடத்தில் இருந்து தான் போர் நீடித்ததன் காரணமாக அங்கிருந்து வட திசையை நோக்கி செல்ல முற்பட்டிருப்பார். எனவே அவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயிரிழந்திருக்கலாம்.

**விடுதலை புலிகளின் வேறு தலைவர்கள் சரணடைவது தொடர்பில் அரசியல் தரப்புகளுடன் தொடர்புகொண்டு உங்களுக்கு அறிவிக்கப்பட்டதா ?**

12 ஆயிரம் பேர் சரணடைந்தனர். அதற்கு முன்னர் சரணடைவது தொடர்பில் பேசப்படவில்லை. சரணடைவது தொடர்பில் எம்முடன் யாரும் தொடர்புக்கொள்ளவும் இல்லை. போர் நிறுத்தம் கேட்ட போது நாங்கள் வேண்டாம் என்று கூறியும். மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தத்தை ஜனவரி மாதம் 31 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி வழங்கினார். இந்த போர் நிறுத்தத்தை பயன்படுத்திக் கொண்டு பிரபாகரன் முல்லைத்தீவில் எனது பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குதல் நடத்தினார். இதன் போது 5 கிலோ மீற்றர் வரை பின் சென்று ஒரு மாதிரி நிலையை நாங்கள் தக்க வைத்துக் கொண்டோம். இதனை தவிர சரணடைவது தொடர்பில் என்னுடன் யாரும் பேசவில்லை. ஆனால் பஷில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடப்பட்டதாக தகவல் உள்ளது. எனவே இதனுடன் மேலும் தொடர்புபட்ட சர்வதேச தரப்புகள் ஒரு கட்டத்தில் வெளியில் வந்து கூறுவார்கள்.

**விடுதலை புலிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளீர்கள். இந்த பணம் எப்போது வழங்கப்பட்டது?**

> **"பாலசந்திரன் கொலையில் இந்தியாவின் காங்கிரஷ் அரசு செயற்ப்பட்டதன் அடிப்படை காரணம் இந்திய பிரதமர் ரஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமை என்று அறியப்படுகின்றது"**

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதே விடுதலை புலிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டது. தமிழ் மக்களை வாக்களிக்க விடாது பிரபாகரன் தடுத்தார். ஒருவர் மாத்திரமே வாக்களித்தார். அவரது கைகளும் வெட்டப்பட்டது. வாக்களிப்பதை தடுப்பதற்காகவே பிரபாகரனுக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டது. இதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. பஷில் ராஜபக்ஷ விடுதலை புலிகளுக்கு பணம் வழங்கியமை தொடர்பில் எனக்கு கூறினார். 200 மில்லியன் ரூபா வழங்கியுள்ளனர். இந்த பணம் எதற்காக வழங்கப்பட்டது? தமிழ் மக்களை வாக்களிக்க விடாது தடுப்பதற்கு கைமாறாக நாங்கள் என்ன செய்ய வேண்டும் என பிரபாகரனிடம் இவர்கள் கேட்டுள்ளனர். கடற் புலிகளுக்கு தேவையான படகுகள் மலேசியாவில் உள்ளன. அதனை பெற்றுக் கொள்ள 2 மில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்றது. அதற்கு தேவையான பணத்தை தருமாறு பிரபாகரன் கேட்டுள்ளார். இதனடிப்படையிலேயே பணம் வழங்கப்பட்டுள்ளது. இல்லை என கூறினாலும் அவற்றை நான் பதிவு செய்யவில்லை. ஆனால் அப்போதைய இராணுவ தளபதி என்ற வகையில் எனக்கு நினைவில் உள்ளது.

**போரின் இறுதி கருணத்தில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மற்றும் அழுத்தங்கள் எதுவும் உங்களுக்கு காணப்பட்டதா?**

போரின் கௌரவத்தை பெற்றுக்கொள்ளும் பேராசையில் என்னை ஓரங்கட்ட முற்பட்டனர். ஜகத் ஜயசூரிய வவுனியாவிற்கு பொறுப்பாக இருந்தார். இவருக்கு பொறுப்பளித்து விட்டு என்னை விலகியிருக்குமாறு பாதுகாப்பு செயலாளர் கூறினார். நல்லவேளை. நான் விலகவில்லை. ஏனென்றால் அந்த காலப்பகுதியில் புதுக்குடியிருப்பை அண்மித்த பகுதிகளில் பிரபாகரன் கடும் தொடர் தாக்குதல்களை இராணுவ நிலைகள் மீது தொடுத்தார். நான் இருந்திருக்கா விட்டால் போர் தலைகீழாகி விட்டிருக்கும். ஜகத் ஜயசூரியவிற்கு அவ்வாறான தாக்குதல்களை எதிர்கொள்ளவோ பதில் தாக்குதலுக்கு திட்டமிடவோ முடியாது. இதனை தவிர எனக்கு வேறு அழுத்தங்கள் கொடுக்க வரவில்லை. ஆனால் பாதுகாப்பு செயலாளர் என்னூடாக இல்லாமல் கனிஷ்ட நிலை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். சவேந்திர சில்வா. கமல் குணரட்ன ஆகியோருடன் பாதுகாப்பு செயலாளர் தொலைபேசியில் தொடர்புக்கொண்டிருந்தார்.

இவ்வாறு உரையாடியமையினால் தான் வெள்ளைக்கொடி போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன என நான் நினைக்கின்றேன். பாதுகாப்பு செயலாளர் என் ஊடாக தான் கனிஷ்ட அதிகாரிகளுடன் பேசியிருக்க வேண்டும். அவர் செய்தது தவறு. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ 2008 ஆம் ஆண்டில் இருந்து போரை சீக்கிரம் முடித்து தருமாறு எனக்கு கூறிக்கொண்டிருந்தார். அவசரமாக போரை முடிவிற்கு கொண்டு வர முடியாது. பொது மக்கள் உள்ளே இருக்கின்றனர். எனவே நிதானமாக தான் போரை முன்னெடுக்க வேண்டும் என அப்போது நான் கூறினேன். யார் உயிரிழந்தாலும் பரவாயில்லை. எவனை கொலை செய்தாவது போரை முடியுங்கள் என மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

**பொதுமக்கள் பாதிப்புகள் தொடர்பில் உங்களால் கூற முடியுமா?**

பொது மக்கள் மீதான பாதிப்புகள் தொடர்பில் கூறப்படுவது போன்று பல்லாயிரம் பேர் உயிரிழக்க வில்லை. அவ்வாறு உயிரிழந்திருந்தால் அங்கு தோண்டும் போது எலும்புகள் கிடைத்திருக்கும். ஆனால் புதுமாத்தளன் பகுதியில் விடுதலைபுலி உறுப்பினர்களை அவர்களது புலி கொடியுடன் வானத்திற்கு துப்பாக்கி பிரயோகம் செய்து புதைப்பதை கண்டோம். 900 பேர் வரை புதைப்பதை மேலிருந்து யு வீவில் பார்த்துக் கொண்டிருந்தோம். இதனை தவிர வேறு உயிரிழந்தவர்களை புதைப்பதை நாங்கள் காண வில்லை.

11ஆம் பக்கம் பார்க்க...

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டங்கள் என்னவாகப்போகின்றன?

இன்றைய அரசியல் நிதர்சனங்கள் எதனை எடுத்துக்கூறுகின்றன என்று பார்க்குமிடத்தில் போருக்கு பின்னரான அரசியல் என்பது இலங்கைத் தீவில் பௌத்த வல்லாதிக்கம் மட்டுமே தலைதூக்க வேண்டும் என்பது அவர்களது நிலைப்பாடு அதற்கமைவாகவே இலங்கையினுடைய அரசியலமைப்பு அரசியல் நடவடிக்கைகள் யாப்பின் நடவடிக்கைகள் என்பன நகர்ந்து செல்கின்றன. 13ஐ நிறைவேற்றுங்கள் என்று ஒரு தரப்பு கூற 13ஐ நிறைவேற்றக்கூடாது என்று இன்னுமொரு தரப்பு கூறுகின்றது. 19ஆம் சீர்திருத்தத்திற்கு அப்பால் சென்று 21வது சீர்திருத்தத்தை அமுலாக்குவதன் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டங்களை வழங்க முடியும் என ஒரு தரப்பு கூறுகின்றது. 13வது திருத்த சட்டத்தை ஒழுங்காக கடைப்பிடிக்க முடியாத இலங்கை அரசு 21வது திருத்த சட்டத்தின் ஊடாக தீர்வை வழங்குவது என்பது தமிழினத்தை ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும். ஐக்கிய நாடுகள் சபையில் 52வது அமர்வில் ஹிமாலிக்காவினுடைய பேச்சுக்களும் நகைப்பிற்குரியது. தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பில் வடகிழக்கிணைந்த தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை அடங்கலாக இனப்படுகொலைக்கானதீர்வுஎன்றவிடயங்கள் பாதிக்கப்பட்ட தமிழ் தரப்புக்களினாலும் தமிழ் அரச கட்சி தலைவர்களினாலும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது அதனை மறுப்பதற்கில்லை.

மற்றுமொரு விடயமாக மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சிமன்ற தேர்தல் இரண்டையும் அரசாங்கம் வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. காரணம் எதிர்வரும் 25ஆம் திகதியுடன் உள்ளூராட்சி சபைகளும் தாமாகவே செயலிழக்கின்றன. உள்ளூராட்சிமன்றங்களிற்கான 341 மக்கள் பணிகளும் அத்துடன் நிறைவடையும். உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக மக்களுக்கு செய்யப்பட்டுவந்த சேவைகள் அனைத்தும் இனி முடங்கிப்போகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. குறிப்பாக திருமண வைபவம் ஒன்றிற்கு அழைப்பு கொடுத்து அதற்கான ஆயத்தங்கள் செய்து அதனை நிறுத்தி வைப்பது போன்ற செயற்பாடே இலங்கையில் நடந்து வருகின்றது. ஒருவேளை அதிகாரமற்றவராக தான் தோற்றுவிடுவேன் என்ற பயம் இலங்கை நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இருக்கலாம். இன்னும் சில நாட்களில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் கதைகள் மலிங்கடிக்கப்பட்டு மாகாணசபைத் தேர்தல் என்ற விடயமும் முன் வரலாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் இடம்பெறாது என்று தெரிந்தும் ஐக்கிய தேசிய கட்சியும் வேட்புமனு தாக்கல் செய்து பிரச்சாரங்களில் ஈடுபட்டதுதான். எனவே இந்த நாட்டில் போர் முடிவடைந்து 13 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் நாட்டின் பொருளாதாரம் நாட்டின் வளர்ச்சியை சீர்தூக்குவதற்கு யுத்தத்தின் பின்னர் வந்த அரச தலைவர்களும், அரச அதிகாரிகளும் அதனை சீராக எடுத்து செல்லவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. நல்லிணக்க அடிப்படையில் அரசாங்கம் முன்னெடுக்கின்ற ஒவ்வொரு விடயங்களும் தமிழ் மக்களுக்கு பாதகமான தன்மையையே கொண்டிருக்கின்றது தொடர்ந்தும் அரசாங்கத்தினால் நில ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் அக்கறை கொள்ளாது போன்ற அரச செயற்பாடுகள் அமையப்பெறுகின்றது. இதனை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளாது கூட ஆளுங்கட்சி எதிர்கட்சி என குழப்பங்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றன. மாற்றத்திற்கான வழிமுறைகளை கையாளுகின்ற அரசியல் இராஜதந்திர நகர்வுகளை தமிழ் தரப்பு நகர்த்தினால் மட்டுமே ஒரு தீர்வை நோக்கி நாம் பயணிக்க முடியும் என்பது இன்றைய யதார்த்தம். ஏமாற்றுபவர்கள் இருக்கும் வரை ஏமாறுபவர்கள் இருந்து கொண்டு தான் இருப்பார்கள் என்பது போன்று தமிழர் விவகாரம் அமைந்து விடக்கூடாது என்பதனையே நாம் வலியுறுத்துகின்றோம்.






# கல்லறைப் பூக்கள்

**பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஶ்ரீகந்தநேஷன்**

என்னை அண்ணாதான் குளிப்பாட்டும் சாப்பாடு தீத்திடும். என்ன அப்பா எனக்கு சாப்பிட கொண்டுவந்தாய்?. இஞ்ச எனக்கு சொக்காவோன்றும் தறமாட்டாங்க. அப்பா அண்ணாதான் பாவம் தண்ணிக்குப் போனாலும் சாப்பாட்டுக்குப் போனாலும் எல்லா ஆக்களும் குட்டுறாங்க, பேசுறாங்க, அடிக்கிறாங்க."

"மகள் இனி பயப்பிட வேண்டாம் அப்பாதானே வந்திட்டேன்"

"மகன் சாத், அம்மா வாகனத்தில் ஏறி வரவில்லையா?"

"இருட்டுக்குள்ள உங்களையும் காணவில்லை அம்மாவையும் காணவில்லை"

"அம்மா எங்கயாவது ஒரு பள்ளிக்கூடத்தல இருப்பாங்க கவலைப்படாதிங்க?"

"விடிய என்ன சாப்பிட்டிங்க பிள்ளைகளே?"

"பசிக்கவேயில்லை பாண் கொடுத்தாங்க தங்கச்சி மட்டும் சின்னத்துண்டு சாப்பிட்டுச்சி. பருப்பு கறியில் உப்பும் இல்லை"

"இரவு படுக்க இயலாது அப்பா ஒரே குளிர் காற்று"

"கொஞ்சம் பொறுத்துக் கொள் மகள்"

"வேற ஆக்களுக்கு அடைச்ச இடம் கொடுத்திருக்காங்க"

"அது அப்பா தங்கச்சி சொன்னாலும் கேக்குதில்லை பாலூட்டும் தாய்மாருக்கு நாலுபக்கமும் சாறியாலைச் சுற்றி மறைச்சி கொடுத்திருக்காங்க"

"அம்மாவைத் தேடிப் பிடிக்கும் மட்டும் இரண்டு பேரும் கொஞ்சம் பொறுங்க"

அம்மாவின் ஞாபகம் வந்த கமலி, "அப்பா, அம்மா வேணும். அம்மா எங்க, ஏன் அம்மாவை விட்டிட்டுவந்திங்க? அம்மா... அம்மா" - ஒற்றைக் காலில் நின்று அடம்பிடித்தாள்.

"மகள் அழாதிங்கோ அம்மாவை நாளைக்குக் கூட்டிக்கொண்டு வாறன்"

"இல்லையப்பா, அம்மா...?!....?"

"வா போவம் கடையில் சொக்கா வாங்கி தாறன்"

மூவரும் உள்ளே இருக்கும் சின்ன பெட்டிக்கடையை நோக்கி நடந்தார்கள். கனகரின் முகம் பிள்ளைகள் கிடைத்துவிட்டார்கள் என்பதால், சுடச்சுட ஒளிரும் பொன் போலவும் மனைவியைக் காணவில்லை என்பதால், இடையிடையே சந்திரனில்லா வானம் போலவும் காட்சியளித்தது. விளையாட்டுக் குணம் கொண்ட கமலி தற்காலிகமாக தாயை மறந்திருந்தாள். இரண்டு தசாப்தங்களுக்குப் போராட பிறந்தவன் போல சாத் கம்பீரமாக காட்சியளித்தான். சாத்துக்கு எப்படித் தெரிந்திருக்கும் உள்நாட்டுப் போர்ளு வைரஸ் போர் என்ற இரண்டில் எதை வெற்றிக்கொள்ளப்போகிறான் என்று? தன்னுடைய பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதற்கு எதிர்காலத்தில் எதிர் கொள்ளப்போகும் சவால்களைக் கனகர் ஊகித்தாரோ, ஊகிக்கவில்லையோ. பெற்றோரால், பிள்ளைகளுக்கு எதிர் காலத்தில் கொடுக்கக் கூடிய செல்வம் கல்வி ஒன்றுதான் என்பதை கனகர் நன்கு அறிந்திருந்தார்.

முக்யோகபுரம் மகா வித்தியாலயத்தில் ஒரு மாத காலமாக இவர்களின் வாழ்க்கை போராட்டமாகவே சென்றது. கனகரும் தனது மனைவியைத் தேடாத இடமில்லை.

*06.*

கனகர், ஒரு சமயம் கிளாலி கடலால் வந்தவர்கள் காயம் அடைந்திருந்தவர்கள் சிலர் மரணம் அடைந்திருப்பதாகவும் அவர்களின் பிணங்களை உரியவர்கள் பொறுப்பெடுக்குமாறும் செவி வழியாக ஒரு செய்தியைக் கேள்வியுற்றார். 'தனது மனைவியும் அதில் இருப்பாள்' என்று எண்ணி வைத்தியசாலைக்குச் சென்றார். அங்கு எதிர் பார்த்ததெல்லாம் தலைகீழாக நடந்தது.

வைத்தியசாலையின் பிணவறையின் வாயிற்காவலனின் அனுமதியைப் பெற்று உள்ளே சென்றார். மூன்று பிணங்கள் தனித்தனியாக துணிகளில் மூடியபடி கட்டில்களில் கிடக்கின்றன. முதலாவது பிணத்தைப் பதற்றத்துடன் முகத்தின் துணியை விலக்கிப் பார்த்தார். அது கமலத்தின் பிணம் இல்லை என்றவுடன் மனம் ஆறுதல் கொண்டது. இரண்டாவது பிணத்தின் முகத்துணியை கைகள் நடுங்க நடுங்க மெது மெதுவாக விலக்கிப் பார்த்தார். அதுவும் கமலத்தின் பிணம் இல்லை என்றவுடன் மனம் சிறிது தடுமாற்றம் நீங்கியது. 'நான் கும்பிடுற அம்மா அப்பாவாக அதுவும் கமலாவாக இருக்காது. இப்படி அம்மாவை பார்த்தா என்ர பிள்ளைகள் தாங்குமா?' - மனத்திற்குள் எண்ணிக்கொண்டு, மூன்றாவது பிணத்தின் முகத்துணியை விலக்கிப் பார்த்தார்.

அவரின் கண்களை அவராலையே நம்ப முடியவில்லை. ஒரு மாதத்திற்கு முன்னர் பார்த்த அவளேதான். தெளிந்த அறிவுடன் நம்பிக்கையும் ஆறுதலும் கொடுத்த அந்த இளம் பெண்தான். ஊமை கண்ட கனவு போல தனக்கும் அவளுக்கும் ஏற்பட்ட திடீர் பாசப்பிணைப்பைத் தனக்குள் வைத்திருக்க முடியாமல் தடுமாறினார். வெளியில் வருவதற்கு மனமில்லாமல் வந்தார். கனகர் மினிவேனில் தன்னுடைய கண்களையே நம்ப முடியாமல் ஏறினார். இப்போது முன்னர் வழிகாட்டிய ஐயா வழிப்போக்கன் அல்லர். கனகருக்கு அறிமுகமான ஒருவர். மீண்டும் மினிவேனுக்குள் ஒருவரை ஒருவர் சந்தித்து புன்னகித்தனர்.

"என்னடா அப்பா முகம் பேய் அறைஞ்ச மாதிரி இருக்கு. எதாயிருந்தாலும் சொல்லு. எங்க கொஸ்பிட்டலுக்கு கிளினிக்குக்குப் போட்டா வாறா?"

"கொஸ்பிட்டலுக்குத் தான் போயிட்டு வாறன் ஆனால், கிளினிக்குக்கு இல்லை"

"அப்ப எதற்கு?"

"என்ர மனிஷியைத் தேடிப் போனனான்"

"என்ன உன்ர மனிஷியைக் காணவில்லையா?"

"ஓம் அய்யா இப்ப ஒரு மாதமாகத் தேடித் தேடி களைச்சுப் போனன்"

"எங்கயாவது ஒரு இடத்தில் இருப்பாள். கவலைப்படாதை. அதற்கு ஏன் முகமெல்லாம் கருத்து போய் இருக்கு?"

"மாங்குளம் ஆஸ்பத்திரியின் பிணவறையில் சில பிணமிருக்குதெண்டு பார்க்கப்போனான். ஒரு பிணத்தைப் பார்த்து எனக்கு காலும் கையும் ஓடவில்லை"

"ஏன்?"

"அவளுடன் சில நாள் பழக்கந்தான். தெளிந்த அறிவு,தீர்க்கமான சிந்தனை,கருணை உள்ளம், பொறுமைவாதி இவையெல்லாம் ஒன்று சேர்ந்த அந்த பெண்ணைப் பற்றி நான் கண்ட கனவு எதிர்காலத்தில் பெண் சுதந்திரத்தின் முழு அடையாளமாக வருவாள் என்று"

"சுத்தி வளைச்சு பேசாமல் அறக்கப்பறக்க சொல்லு"

"எனக்கு வைத்தியசாலையில் ஒரு தாதி ஒத்தாசையாக இருந்தாள். அவளேதான், அந்த பிணவறையில் பிணமாகக் கிடக்கிறாள். நம்ப முடியல்ல"

"அட மாங்குளத்து மாலதி" என்றார், ஐயா. இதைக் கேட்டதும் கனகரின் முகத்தில் உறைந்த இரத்தம் ஓட ஆரம்பித்ததால் முகம் சற்று ஒளிர்ந்தது.

"அந்த தாதியைத் தெரியுமா?"

"ஓம்"

"முல்லைத்தீவு றோட்டில கரையில் இருக்கிற வீட்டில தனியாக இருக்கிற மதிவதனி"

"என்ன அய்யா அவளுக்கு நடந்துச்சு? தங்கமான பிள்ளை"

"நேற்று இரவு இரண்டு மூன்று பொடியன்கள் பக்கத்து 'பாரில்' மூக்கு முட்ட குடிச்சுப் போட்டு, அவளுண்ட வீட்டுக்குள்ள புகுந்து மிருகத்தனமா அவளை சீரழிச்சுப்போட்டதோட, அவள அடிச்சு அரை உயிரோட முனியப்பர் கோயிலுக்குப் பக்கத்திலிருக்கும் காட்டில் போட்டு அவளுக்கு மேல் லாம்பெணையையும் ஊற்றி சீனியையும் போட்டு கொளுத்திப் போட்டாங்கள். வேட்டக்காரர் முருகேசு வேட்டைக்குப் போகேக்க, 'கொர்...கொர்...' என்று மூச்சு இழுத்துக்கொண்டிருக்கிற சத்தம் கேட்டு இருக்கு. அவர் போய்பார்தாராம். காவாசி உயிருடன் உடல் எரிந்தும் எரியாமலும் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்ததாம். ஆஸ்பத்திர்க்குக் கொண்டு போகேக்க இடையிலையே செத்துப் போச்சாம். இப்படி இந்த ஊரில எத்தனை பெண்களுடைய வாழ்க்கை மண்ணோட மண்ணாப் போச்சு? சரி அத விடு" - சாவதானமாக கூறிவிட்டு, மினி பஸ்ஸின் வேகம் குறைந்ததும் ஒரு பயணி இறங்கியதும் அந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

"அவளிண்ட 'பொடி' எங்க கொண்டு போறாங்க"

"ஊர் ஆக்களெல்லாம் காசு போட்டு செத்த வீடு நாளைக்கு மாங்குளத்தில் உள்ள அவள்ட கொட்டில்ல நடக்கப் போகுதாம்?"

"நாளைக்கு எத்தனை மணிக்கு எடுக்கிணம், நீங்க போறீங்களா?"

"வியாபாரம் செய்ற இடம் எனக்கிட்ட எத்தின தரம் கச்சானும் வாங்கியிருக்கு?. போகத்தானே வேண்டும்"

"விடிய போகேக்க நானும் வாறன்"

"முதல் பஸ் விடிய ஏழு மணிக்கு இருக்கு படுத்து நித்திரையாகிறாத?"

"இல்லை அய்யா கட்டாயம் வாறன். அவள ஒருக்க கடைசியாகப் பாக்கணும். நல்ல பண்பான புள்ள"

"இறங்கிற இடமும் கிட்ட வருது. இந்தா புள்ளைகளுக்குக் கொடு கச்சான் கொஞ்சம் இருக்கு"

"வேண்டாம். உங்கட பேரப்பிள்ளைகளுக்குக் கொடுங்க. நான் புள்ளைகளுக்கு பிஸ்கட் வாங்கியிருக்கன்."

"இல்லை தம்பி அவங்களுக்கு இருக்கு. நீ கொண்டு போ. பேரப்பிள்ளைகள் எந்த நாளும் சாப்பிடுங்கள்"

கனகர் பாடசாலையின் வாசற் படலையைத் தாண்டி உள்ளே சென்றார். எங்கோ இருந்து இரண்டு பிள்ளைகளும் ஓடி வந்து, "எங்க அப்பா, அம்மாவைக் கூட்டிக்கொண்டு வாறன் என்று சொல்லிட்டுப் போனிங்கள்" என்று சிணுங்கினார்கள்.

கனகரும் பிள்ளைகளுக்குத் தீன்பண்டங்களைக் கொடுத்து அவர்களின் சிந்தனையைத் திசைத் திருப்ப எண்ணினார்.

மகள் மட்டும் கச்சான் பையை வாங்கிக் கொண்டு கச்சான் உடைத்து சாப்பிடுவதில் தற்காலிகமாக கவனத்தைத் திருப்பினாள். சாத் பிஸ்கட்டைச் சாப்பிட்டுக் கொண்டே "அப்பா, அம்மாவ பாத்திங்களா?" - கேட்டான்.

**தொடரும்...**

# உள்ளூராட்சி மன்ற தேர்தலும் ரணிலின் ஏமாற்று அரசியலும்




உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அது நடாத்தப்பட வேண்டும் அதன் பிரகாரம் தேர்தல் ஆணையாளர் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வர்த்தமானி மூலம் வெளியிட்டிருந்தார். அது கடந்த 9 ஆம் திகதி நடந்து முடிந்திருக்க வேண்டும் ஆனால் தேர்தலை நடாத்துவதற்கான நிதி பாதுகாப்பு வாகனங்கள் போன்ற பல விடயங்களை தேர்தல் ஆணையாளர் பூர்த்தி செய்யவேண்டியிருந்தது. ஆனால் இலங்கையில் இருக்கின்ற பொருளாதார சூழ்நிலைக்குள் தேர்தலை நடாத்த முடியாது என்பது ஜனாதிபதியின் திடமான ஒரு கருத்தாக இருக்கின்றது. அவர் அந்த கருத்தை பாராளுமன்றத்திலும் வெளியிலும் பல்வேறுபட்ட முறை அதை தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் எதிர்கட்சிகளை பொறுத்தவரையில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் என்பது நடத்தப்பட வேண்டும் தேர்தல் நடத்தப்படாதவிடத்து அது இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்பானது, இலங்கையின் ஜனநாயகத்திற்கு பாதிப்பானது உள்ளூராட்சிமன்ற தேர்தல் என்பது கிராம மட்டங்களில் அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செலுத்துகின்ற ஒரு அமைப்பு முறை எனவே அதனை நிராகரித்து செயற்படுவது என்பது ஜனநாயக விரோதமான செயற்பாடு தேர்தலை நிராகரிப்பது என்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடு என்ற பல விடயங்களை எதிர் தரப்புக்கள் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கின்றன.

எனவே அந்த வகையில் தேர்தலை வைக்க வேண்டும் என்பது எதிர் தரப்பினரின் கோரிக்கையாக இருக்கின்றது. நீதிமன்றம் இந்த வருடம் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட வரவு – செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியை முடக்கக்கூடாது என்ற ஒரு கருத்தை நீதிமன்றம் வெளியிட்டிருக்கின்றது. அரசாங்கத்தை பொறுத்தவரை நாங்கள் அதனை முடக்கவில்லை.

ஆனால் தேர்தலுக்கான நிதி கைவசம் இல்லை ஏனென்றால் அதிலும் விட அவசரமான பல விடயங்கள் இருக்கின்றது பொருட்கள் பற்றாக்குறை இருக்கின்றது ஏனைய எரிபொருள்கள் போன்றவை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கின்றது. என அவர்கள் கூறுகின்றார்கள். எனவே அந்த வகையில் ஒத்துழைக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக இருக்கின்றது. ஆனால் மறுபுறத்தில் உள்ள உண்மையான விடயம் என்னவென்றால் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நிதி என்பது பற்றாக்குறையா என்ற கேள்வி என்பது ஜனாதிபதியை பொறுத்தவரையில் அவர் தற்பொழுது எந்த தேர்தலையும் நடத்த விரும்பவில்லை.

குறிப்பாக தற்பொழுது ஒரு தேர்தல் நடத்தப்பட்டு அந்த தேர்தலில் ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி தோற்கடிக்கப்படும் பொதுஜன பெரமுன கட்சி தோற்கடிக்கப்படும் இவர்கள் தான் தற்பொழுது ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களாக இருக்கின்றார்கள். இந்த இரண்டு தரப்பும் தோற்கடிக்கப்பட்டு எதிர்கட்சியில் இருக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தியோ சஜித் பிரேமதாஸவோ அல்லது ஜே.வி.பி தலைமைத்துவத்தில் இயங்கக்கூடியவர்களோ வெற்றி பெறும் பட்சத்தில் அரசாங்கம் மக்கள் ஆணையை இழந்து விட்டது. எனவே ஜனாதிபதியோ அரசாங்கமோ தொடர்ந்து பதவியில் இருக்க தகுதியற்றவர்கள்.

எனவே அவர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற இன்னுமொரு போராட்டம் ஆரம்பமாகும். எனவே அவ்வாறான ஒரு போராட்டம் ஆரம்பமாகும் பட்சத்தில் பொருளாதார ரீதியாக தற்பொழுது அரசாங்கம் ஐ.எம்.எப் இடம் கடன்களை வாங்கி பொருளாதாரத்தை சீர்செய்கின்ற ஒரு நிலைக்கு வருகின்ற பொழுது அரசாங்கம் அது சூழ்நிலை சீர்குழைக்கப்படும் என அரசாங்கம் நம்புகின்றது ஜனாதிபதி நம்புகின்றார். எனவே ஒரு தேர்தலுக்கு போவதன் ஊடாக மேலும் மேலும் போராட்டம் உக்கிரமடைய இந்த தேர்தல் வலிவகுக்குமே தவிர இது பொருளாதார மீள்ச்சிக்கு இந்த தேர்தல் உதவாது என்றவொரு கருத்து ஆளுங்கட்சியில் இருக்கின்ற பலரும் சுட்டிக்காட்டுகின்றார்கள். எனவே தற்பொழுது தேர்தல் தேவையில்லை என்பது அவர்களுடைய கருத்தாக இருக்கின்றது. ஒரு பக்கத்தில் பார்த்தால் ஜனாதிபதியோ பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டிருக்கக்கூடிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பொதுஜன பெரமுனவோ ஒரு தேர்தலுக்கு அஞ்சுகின்றார்கள் என்பது உண்மையான விடயம். தேர்தலை பற்றி குறிப்பிடுகின்ற பொழுது பொதுஜன பெரமுனவோ அல்லது மகிந்த ராஜபக்சவையோ நாங்கள் தேர்தலுக்கு தேர்தலை கண்டு பயப்படவில்லை தேர்தலுக்கு ஆயத்தமாக இருக்கின்றோம் என்று கூறினாலும் கூட அவர்கள் தேர்தலுக்கு தயாராகவில்லை என்பது தான் உண்மையான விடயமாக இருக்கின்றது.

தேர்தலுக்கான திகதியை அறிவிக்க வேண்டிய தேவையில்லை அந்த கால நேரங்களை எப்பொழுது தேர்தல் நடத்த வேண்டும் என்பதை தேர்தல் ஆணையகம் தீர்மானிக்க முடியும்.

அந்த தீர்மானத்தின் பிரகாரம் அவர்கள் தீர்மானத்தை எடுத்து அறிவித்தாலும் கூட தேர்தல் ஆணையாளருக்கு ஒரு கடமை இருக்கின்றது. தேர்தலை நடாத்தி முடிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அவர் எடுத்தாக வேண்டும்.

அவ்வாறு பார்க்கின்ற பொழுது நாட்டிலுள்ள பொருளாதார சூழ்நிலைகள் எல்லாவற்றையும் கவனமெடுத்து தனக்கு சாதகமான சூழ்நிலை இல்லை என்றால் நிச்சயமாக என்னைப்பொறுத்தவரை அவர் சம்பந்தப்பட்ட பாதுகாப்போ அனைவருடனும் பேசி அவர் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டும். எந்தவிதமான தீர்க்கமான முடிவுகளையும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளாமல் இவர்கள் தேர்தலை அறிவிப்பதும் வேட்பாளர்களை நியமனம் செய்யும்படி அறிவிப்பதும் நாங்கள் அனைவரும் வேட்புமனுக்களை தாக்கல் செய்வதும் வேட்புமனுக்களை தாக்கல் செய்ததன் பின்னர் தேர்தலை ஒத்தி வைப்பதும் தேர்தலை ஒத்திவைக்கும் அரச உத்தியோகத்தில் இருப்பவர்கள் நோ பே எடுத்து தான் இந்த தேர்தலுக்கு வருகின்றார்கள் அவ்வாறு2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இன்று எந்தவிதமான சம்பளம் இல்லாமல் இருக்கின்றார்கள். எனவே அவர்கள் பாதிக்கப்படுவதற்கு காரணமும் இவர்களின் இவ்வாறான இழுபறி நிலைமைகள் தான். எனவே தேர்தல் ஆணையாளருக்கும் இதனை சரியான முறையில் கொண்டு செல்ல அவரால் முடியாமல் இருப்பதும் இல்லாதுபோனால் அதற்கான தகுந்த நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளத் தவறுவது என்ற பிரச்சனையில் அவருக்கு மேலும் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றது அதுபோல் ஜனாதிபதிக்கு நாட்டு மக்களுக்கு சரியான நிலைப்பாட்டை சொல்லக்கூடியவராக அவர் இருக்க வேண்டும் தேர்தல் நடக்காது நடப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று கூற முடியாத ஜனாதிபதியாக இருப்பது கூட ஒரு வெட்கக்கேடாக இருக்கின்றது. என்னவென்றால் ஜனாதிபதியும் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றாரே தவிர திட்டவட்டமாக மக்களுக்கு ஒரு செய்தியை சொல்வதற்கும் அவர் பின் நிற்கின்றார் என்பது தான் எனது கருத்து.



சுரேஸ்பிரேமச்சந்திரன்

எனவே தேர்தல் என்ற விடயத்தை பொறுத்தவரையில் மக்கள் இதில் நம்பிக்கை அற்றவர்களாக தற்பொழுதும் தேர்தல் நடத்தப்படும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிரச்சாரத்தில் யாரும் இறங்கவில்லை ஏன் இறங்கவில்லை என்றால் இந்த தேர்தல் நடக்காது இவர்கள் பொய் சொல்லுகின்றார்கள் என்ற கருத்து தான் வேட்பாளர்கள் மத்தியிலும் இருக்கின்றது மக்கள் மத்தியிலும் இருக்கின்றது.

எனவே தேர்தலுக்கு மேல் ஒரு நம்பிக்கையில்லா தன்மையை உருவாக்குகின்ற சூழலைத்தான் இந்த அரசாங்கமும் தேர்தல் ஆணையகமும் செய்கின்றது. அதே போல் எதிர்கட்சிகள் கூட இவை தொடர்பாக இந்தவொரு குறுகிய காலத்திற்குள் தாங்கள் எப்படி அரசியல் செய்யலாம் எப்படி ரணில் விக்ரமசிங்கவை கவிழ்க்கலாம் என்பது தான் அவர்களுடைய சிந்தனையாகவும் இருக்கின்றது.

எதிர்கட்சி ஜனாதிபதி தேர்தல் ஆணையகம் இவை அனைத்தும் ஒன்றாக இணைந்து இவற்றுக்கு திட்டவட்டமான தீர்வை கண்டு மக்களுக்கு அதை சொல்ல வேண்டும். இவர்கள் அனைவரும் தங்களது குறுகிய அரசியல் இலாப நோக்கங்களுக்காக இவர்கள் செயற்படுவது என்பது வெறுக்கத்தக்கது அறுவறுக்கத்தக்கது சரியான விடயமல்ல என்பது தான் தற்போதைய கருத்து.

# ஜெனீவா தீர்மானம்




## தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுத்தருமா?

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழான இலங்கையின் 6வது காலாந்தர மீளாய்வு 2023 மார்ச் 8 மற்றும் 9ஆந் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெற்றது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை 1980 ஜூன் 11ஆந் திகதி இலங்கை ஏற்றுக்கொண்டது. உடன்படிக்கையை நடை முறைப்படுத்துவதோடு. உடன்படிக்கையின் அனைத்து அரச தரப்பினரும் குழுவிற்கு அவ்வப்போது அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும். அவ்வப்போது மீளாய்வுகளில் பங்கேற்பதற்குமானதொரு தன்னார்வக் கடமையை மேற்கொண்டுள்ளன.

அதன்படி. 1983. 1990. 1994. 2003 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இலங்கை 5 காலாந்தர அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதுடன். 1983. 1991. 1995. 2003 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் 5 மீளாய்வுகளில் பங்கேற்றுள்ளது.

6வது அறிக்கை 2019 பெப்ரவரி 22ஆந் திகதி மனித உரிமைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மனித உரிமைகள் குழு என்பது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை நடை முறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் 18 சுயாதீன நிபுணர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும். அனைத்து நாடுகளின் மீளாய்வுகளும் இக் குழுவால் நடாத்தப்படுகின்றது.

இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க. 6வது மீளாய்வு கலப்பு வடிவத்தில். ஜெனிவாவிலுள்ள ஐ.நா. வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. இலங்கைக் குழுவில் ஜனாதிபதி செயலகம். பொதுப் பாதுகாப்பு அமைச்சு. சட்டமா அதிபர் திணைக்களம். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. வுக்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகம். நீதி. சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு. பாதுகாப்பு அமைச்சு. பெண்கள். சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு. சுகாதார அமைச்சு. சிறைச்சாலைகள் திணைக்களம். பொலிஸ் திணைக்களம். காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம். இழப்பீடுகளுக்கான அலுவலகம். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் போன்றவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கொழும்பில் இருந்து சிரேஷ்ட அதிகாரிகள் மீளாய்வுக்கு இணைந்துகொள்வர்.

இலங்கைக்கு மேலதிகமாக. 2023 பெப்ரவரி 27 முதல் மார்ச் 24 வரை நடைபெறவுள்ள மனித உரிமைகள் குழுவின் 137வது அமர்வின் போது. எகிப்து. துர்க்மெனிஸ்தான். சம்பியா. பெரு மற்றும் பனாமா ஆகிய நாடுகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இலங்கையில் வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு விடயம் குறித்து ஐ.நாவின் எந்தவொரு கருத்துக்களையும் வெளியிடாத சிறிலங்கா அரசாங்கம். வடக்கு கிழக்கு மக்களுக்கு போருக்கு பின்னரான அபிவிருத்தியே அவசியமானது என்ற தொனிப்பட கருத்து வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரித்துள்ள ஜெனிவாவிற்கான சிறிலங்காவின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக. அது நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்கு உதவாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கான சிறிலங்கா அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது வழக்கமான அமர்வில் உரையாற்றிய போது ஜெனிவாவிற்கான சிறிலங்காவின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில். சிறிலங்காவின் அனுமதியின்றி 51 இன் கீழ் ஒன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் ஹிமாலி அருணதிலக குற்றம் சுமத்தியுள்ளார். கடந்த ஒக்டோபரில் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கூறிய சிறிலங்காவின் நிலைப்பாட்டை மீண்டும் தாம் வலியுறுத்துவதாக கூறியுள்ள அவர். பேரவையின் தீர்மானத்தை நிராகரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். சிறிலங்காவின் வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை வலுப்படுத்தும் 46 இன் கீழ் ஒன்று தீர்மானம் இலங்கை மக்களுக்கு உதவாது எனவும் அது இலங்கை சமூகத்தை பிளவுப்படுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார். மோதல். தெரிவு மற்றும் ஒருதலைப்பட்சம் ஆகியவற்றின் மூலம் அல்லாமல். உரையாடல் மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். வெவ்வேறு சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அதிபரின் தலைமையில் அமைச்சரவை உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**21 ஆவது அரசியலமைப்பு திருத்தம்**

உண்மையைக் கண்டறியும் பொறிமுறை மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றை உருவாக்குதல். வடக்கு மற்றும் கிழக்கிற்கான விரைவான அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல் மற்றும் விடயங்களுக்கு தீர்வு காண்பது உள்ளிட்ட விடயங்களை விரைவாகத் தீர்க்க வேண்டிய விடயங்களை இந்த அமைச்சரவை உபகுழு அடையாளம் கண்டுள்ளது எனவும் ஹிமாலி அருணதிலக கூறியுள்ளார்.

குறிப்பாக காணாமல் போனவர்கள். மீள்குடியேற்றம் மற்றும் காணி தொடர்பான விடயங்களும் இவற்றில் அடங்கும் என கூறியுள்ள அவர். சிறிலங்காவின் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம். கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். 21 ஆவது அரசியலமைப்பு திருத்தமானது சுயாதீன மேற்பார்வை. அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் அமைப்பு ஆகியவற்றை மேலும் பலப்படுத்துகிறது என்றும் ஹிமாலி அருணதிலக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசபிரதிநிதியாக ICCPR க்கு சென்ற இலங்கை சார்பாக உரையாற்றிய ஹிமாலி அருணதிலக அரசாங்கம் கொடுக்கின்ற தகவல்கள் அடிப்படையிலே அவருடைய கருத்தியல்கள் அமைகின்றது. எவ்வாறாயினும் 21வது சரத்தின் கீழ் புதிய சட்டத்தின் மூலமாக தமிழ் மக்களுக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடபட்டிருந்தாலும் எற்கனவே வடமாகாணசபையினால் 2015ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்ற விடயத்தைத் ICCPR க்கு அனுப்பட்டது. அதனை கருத்தில் கொண்டு அதனை எற்றுக்கொண்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறுவது போன்று 13வதது. 19வது . 20வது. 21வது திருத்தச்சட்டம் இதற்கு அப்பால் மனித உரிமை மீறல்கள் என்ற விடயம் ஆராயப்பட்டு இனப்படுகொலை அல்லது போர்க்ககுற்றம் என்கின்ற அடிப்படையில் தீாவுகள் வழங்கக்பட வேண்டும் என்கின்ற விடயத்தை யே வலியுறுதித்தி கூறப்பட்டுள்ளது. வட மாகாணசபையால் கொண்டு வரப்பட்ட ஏகமாதான தீா்மானமாக அமையப்பெற்றுள்ளது. தற்போது 13வது திருத்தச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட மாகாணசபை இயங்காத நிலையில் அரச பிரதிநதியாக சென்ற ஹிமாலிக்கா இவ்வாறான கருத்துக்களை தெரிவித்திருக்கின்றது. தமிழ் தரப்பயில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. 13வது திருத்தச்சடட்த்தில் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் முழுமையா நிறைவேற்றப்படாத நிலையில் அரசாங்கம் இனிவரும் காலங்களில் ஏற்படுத்த போகும் திருத்தச்சட்டம் என்பது எவ்வகையில் தமிழ் மக்களுக்கான தீாவு திட்டத்தை பெற்றுக்கொடுக்கொடுக்கும். எது எவ்வாறாயினும் மனித உரிமை பேரவையின் 52வது அமர்வானது

> **“இலங்கையில் வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு விடயம் குறித்து ஐ.நாவின் எந்தவொரு கருத்துக்களையும் வெளியிடாத சிறிலங்கா அரசாங்கம், வடக்கு கிழக்கு மக்களுக்கு போருக்கு பின்னரான அபிவிருத்தியே அவசியமானது”**

தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டத்தை நோக்கி செல்வதாக அமையப்பெறவில்லை என்பதே இங்கு கண்கூடு.

ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசச் சமவாயம் (International Covenant on Civil and Political Rights-ICCPR) 2007 ஆண்டு 56 ஆம் இலக்கச் சாதாரண சட்டத்தின் பிரகாரம் இலங்கை ஒற்றையாட்சி அரசின் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் யாப்பில் இணைப்பதென்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அத்துடன் சுயநிர்ணய உரிமையையும் (Right to Self-Determination) முழுமையாக ஏற்க வேண்டும்.

ஆனால் ICCPR உறுப்புரை ஒன்றில் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்பட்டிருந்த பகுதிகளை நீக்கி. இனக் குரோதங்களைத் தூண்டுதல். மதங்களிடையே வெறுப்புகளை உருவாக்குதல். மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைத் தூண்டுதல் போன்றவற்றுடன் மேலதிகமாக இலங்கைத் தேசிய பாதுகாப்புக்கு எதிரான விடயங்களும். இலங்கைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் ஏற்கனவே இருந்த பிரிவு 14. 2 என்ற ஆபத்தான சரத்தும் இணைப்பட்டிருக்கின்றது. அதாவது இலங்கை பெரும் ஏமாற்று ஒன்றைச் செய்திருக்கிறது. இது பற்றி ஐ.நாவும் இலங்கையிடம் நியாயம் கேட்டதில்லை.

சுமந்திரன் முதன் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக 2010 இல் பதவியேற்ற போது தனது உரையில் இது பற்றிச் சுட்டிக்காட்டியிருந்தார். பின்னர் அது பற்றிய பேச்சுக்களை அவர் கைவிட்டுத் தமிழரசுக் கட்சி அரசியலை மாத்திரம் முன்னெடுத்தார்.

**ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு இது பற்றித் தெரியுமா?**

ஐ.நாவின் ICCPR இலங்கையில் பிழையான முறையில் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது என ஐ.நாவுக்கு எப்போதாவது எடுத்துச் சொன்னார்களா? ICCPR உறுப்புரை ஒன்றிலும் கோளாறுகள் உள்ளன. அது பற்றியும் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஐ.நாவுக்கு எடுத்துக் கூறியிருக்க வாய்ப்பில்லை.

குறிப்பாக ICCPR இல் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்படுகின்ற உறுப்புரை ஒன்றில். ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்கள்கள் (All peoples) என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதனையே இலங்கையும் ICCPR ஐ நடைமுறைப்படுத்திய போது தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறது. ஆனாலும் ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற முறையில் ICCPR உறுப்புரிமை ஒன்றில் கூறப்பட்டிருக்கும் சுயநிர்ணய உரிமை. இலங்கைத்தீவில் தனித்துவமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென. அரசறிவியல் கோட்பாட்டு விளக்கங்கள் மூலம் நிறுவியிருக்கலாம். ஆனாலும் அதற்கான எந்தவொரு முயற்சியும் இதுவரை இல்லை. வெறுமனே தேர்தலில் வெற்றி பெறும் வியூகங்களை மாத்திரமே தமிழ்த்தேசியக் கட்சிகள் வகுக்கின்றன.

எனினும் தமிழ் தரப்புக்கள் தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை கோட்பாடுகளை வலியுறுத்தியே வண்ணம் ஜெனீவா அமர்வுகளில் கலந்து கொள்கின்றார்கள்.

சாதாரண பொது மக்களுக்கும் இது பற்றிய புரிதல் இல்லை. ஏனெனில் வாசிப்பு. இனம் சார்ந்த அறிவுத் தேடல் என்பது எமது தமிழ்ச் சமூகத்தில் 2009 இன் பின்னரான சூழலில் குறைவடைந்தே வருகின்றது.

-நிமிஷிகா-



# இலங்கையில் தொடரும் தற்கொலை மரணங்கள்!

இலங்கையில் நிலவுகின்ற மோசமான பொருளாதார நெருக்கடியானது தற்கொலைகளுக்கு வழியமைத்துள்ளதாக காணப்படுகின்றது. பல குடும்பங்கள் வாழ்க்கை செலவுகளை சமாளிப்பதில் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலையே தற்கொலைக்கு வழியாக சுட்டிக்காட்டப்படுகின்றது. குறிப்பாக, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களே மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், குழந்தைகளுக்கு கூட போதியளவு உணவு வழங்க முடியாத நிலை தொடர்வதன் காரணமாக வாழ்க்கை செலவை கொண்டு செல்வதற்கானபோதியளவான வருமானங்கள் இல்லாத சூழலில் மன அழுத்தங்களுக்கு உட்பட்டு தற்கொலை செய்வதற்கு தூண்டப்படுகின்றனர். தற்கொலைச் சம்பவங்களில் தூக்கில் தொங்குதல் மற்றும் விஷம் அருந்தி உயிர் நீத்தலே அதிகமாகவுள்ளது. மன அழுத்தம், சமூக தொடர்பின்மை மற்றும் அறியாமை போன்ற காரணிகளாலேயே கூடுதலான தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

2020 இல் வெளியிடப்பட்ட WHO தரவுகளின்படி, இலங்கையில் தற்கொலை இறப்புகள் 2,977 அல்லது மொத்த இறப்புகளில் 2.56% ஐ எட்டியுள்ளன. வயது சரிசெய்யப்பட்ட இறப்பு விகிதம் 100,000 மக்கள் தொகையில் 12.89 ஆக உள்ளது. உலகில் இலங்கை 42 வது இடத்தில் உள்ளது.

இலங்கையில் தற்கொலை இறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி அலகா சிங் இதனை குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை கூறியுள்ளார். தற்கொலைகள் அதிகரித்துள்ளதன் பின்னணியில் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கும் பொதுவான காரணிகளில் புறக்கணிப்பும் அடங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் தற்கொலை இறப்பு விகிதம் 100,000 பேருக்கு14 என்று சுட்டிக்காட்டிய அவர், 2019 ஆம் ஆண்டில், தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் இதுவே மிக அதிக எண்ணிக்கையாக இருந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். நிகழ்வில் உரையாற்றிய இலங்கை உளவியலாளர்கள் கல்லூரியின் தலைவர் கபில ரணசிங்க, இலங்கையில் மனநலத்திற்காக தனியான ஒதுக்கீடுகள், வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். மனநல கல்வியறிவின் அடிப்படையில் இலங்கை மிகவும் பின்தங்கியுள்ளது. இந்தநிலையில் பாடசாலைகளில் போதுமான முறையில் கலந்துரையாடுவதற்கு கல்வி முறையில் மனநல விடயங்கள் இணைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த நாட்களில் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலை சம்பவங்களை எடுத்து பார்த்தால் கடந்த ஒரு வாரக்காலப்பகுதிக்குள் சுமார் ஐந்துக்கும் அதிகமான தற்கொலை சம்பங்கள் இடம்பெற்றுள்ளனர். அவற்றுள் வவுனியாவில் கணவன்,மனைவி உட்பட 3வயது மற்றும் 9வயது நிரம்பிய இரு பிள்ளைகள் என . ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் வீட்டிலிருந்து சடங்கலாக மீட்கப்பட்ட சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்ப்படுத்தியுள்ளது. இது தற்கொலை தானா என்பதை ஆராய பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

வவுனியா, குட்செட் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை (7) காலை கணவன், மனைவி மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களை பெரும் வேதனைக்குள்ளாக்கியிருந்தது. இதன் போது சிவபாலசுந்தரம் கௌசிகன் (42), அவரது மனைவி கௌசிகன் வரதராஜினி (36) மற்றும் மகள்களான கௌசிகன் மைதிரா (9), கௌசிகன் கேசரா (3) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் வவுனியா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற்கூற்று பரிசோதனை கடந்த புதன்கிழமை (8) இரவு மேற்கொள்ளப்பட்ட போதிலும், மரணத்துக்கான காரணம் வெளிப்படவில்லை என்றும் ஆனால், அவர்கள் நஞ்சு அருந்தவில்லை என்பது உறுதியாகிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, அந்த நான்கு பேரும் உயிரிழந்தமைக்கான சரியான காரணத்தை கண்டறிய உடற்கூறுகள் மற்றும் இரத்த மாதிரிகள் பகுப்பாய்வு அறிக்கைக்காக அரசாங்க மரண விசாரணை திணைக்களம் மற்றும் மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து யாழ் நகை கடை உரிமையாளரும்அங்குபணிபுரியும்ஊழியரும் தற்கொலை செய்து கொண்டமை சமூகத்தில் பல கேள்விகளை தோற்றுவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நியூ மைதிலி மற்றும் சந்தோஷ் நகைக்கடையின் உரிமையாளர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவரைத் தொடர்ந்து நகைக்கடையில் பணிபுரிந்த பெண்ணும் அதே நிலையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இருவரும் ஒன்றிரண்டு மணி நேரத்தில் தற்கொலை செய்து கொண்டனர். நாவாந்துறையைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதி ஒருவர் இன்று தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். இவர் நகைக்கடையில் வேலை பார்த்து வந்தார். அவர் இன்று நகைக்கடைக்கு வரவில்லை. மதியம் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் தற்கொலை செய்து கொண்ட தகவல் நகைக்கடைக்காரர்களுக்கு தெரியவந்தது. இதையடுத்து மதியம் 2 மணியளவில் தொழிலதிபர் மதிய உணவு சாப்பிட அவரது வீட்டிற்கு சென்றார். வீட்டில் தற்கொலை செய்து கொண்டார். ஆனைப்பாண்டி நாவலர் வீதியில் உள்ள தனது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார். அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் கொழும்பில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இரண்டு மரணங்களும் தொடர்புடையதா? அல்லது தனித்தனி சம்பவங்களா? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அத்துடன் வறுமை காரணமாக தாய்,மகள் தற்கொலை செய்ய முயற்சி செய்வது, குடும்ப தகராறு காரணமாக தற்கொலை முடிவுகள் மற்றும் காதல் விவகாரம் காரணமாக தற்கொலை செய்தல் என பல வகைகளில் இன்று மனித குலம் சமூகத்தில் வாழ முடியாமல் தற்கொலை தான் முடிவு என்று சென்று கொண்டிருப்பது அண்மை கால செய்திகள் மூலம் காண கூடியதாக இருக்கின்றது.

அத்துடன், தற்கொலை மூன்று வகை என "எமில்ட் துர்கைம்" குறிப்பிட்டுள்ளார். அதாவது, தனது இனத்தின் மீதான ஆழமான பற்று காரணமாக செய்து கொள்ளும் தற்கொலை, ஒரு மனிதன் தான் சார்ந்த சமூகத்தை விட்டு தனிமைப்படுத்தப்படுவதால் ஏற்படும் மனவெழுச்சி காரணமாக தற்கொலைக்குத் தூண்டப்படல், எதிர்கால வாழ்க்கை நிச்சயமற்ற நிலையில் வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு ஏற்று வாழத் தெரியாமல் தற்கொலை செய்தல் என குறிப்பிட்டுள்ளார். தற்கொலை என்பது ஒரு நோயாகவே அணுகப்படுகின்றது.

வாழ்க்கையின் ஒரு சிறு அலை, ஒரு சிறு சவால், ஒரு சிறு ஏமாற்றம் இன்றைய இளம் தலைமுறையினரை ஏன் உயிரை மாய்க்கச் செய்கின்றது? உளவியல்ரீதியாக 'Resilience' என இவை குறிப்பிடப்படுகின்றது. நவீன உலகில் நாகரீக போர்வையின் கீழ் வாழும் நாம், கைபேசிகளையும், கணிணிகளையும் மட்டுமே உற்ற நண்பர்களாகவும் துணையாகவும் பார்க்கிறோம். இந் நிலையில் இன்பம் துன்பம் சந்தேகம் தோல்வி வெற்றி என அனைத்து உணர்வுகளையும் அனைத்து நிகழ்வுகளையும் பகிரும் திண்ணையாக தொழில்நுட்பமே காணப்படும் போது மனிதத்துவத்தின் மகத்துவம் மனிதர்களிடையே அருகிப்போய் விட்டது.

இவ்வாறிருக்க தற்கொலைக்கு முயல்வோரை நாம் எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது எனும் ஐயம் தொடர்பான தெளிவு பலருக்கு இருப்பதில்லை. ஒருசராசரிமனிதனின்எண்ண அலைகளுக்கும் தற்கொலை எண்ணம் உடைய ஒருவரின் சிந்தனைக்குமிடையில் அதிகளவான வேறுபாடுகள் உள்ளன. ஒருவர் தற்கொலை செய்துகொள்ளப் போகிறார் என்பதற்கான ஆரம்ப அறிகுறிகளாக குறித்த நபர் பதற்றமாக இருப்பது, எதிலுமே ஈடுபாடு காண்பிக்காமல் இருப்பதுடன் அவர்களுக்கு நெருக்கமான பிடித்த அம்சங்களில் நாட்டமின்றி இருத்தல், விடைபெறுவது போன்ற தொனியிலும் விரக்தியான முறையிலும் கருத்துக்களை வெளிப்படுத்தல், எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புகளற்றுப்போய் இருத்தல். இப்படியான நிலையில் இருப்பவர்களை கவனமாகக் கண்காணிக்க வேண்டும். இந் நிலையில் இவர்களிற்கு தேவைப்படுவதெல்லாம் ஒரு ஆறுதல், தம்மை தாமே ஆசுவாசப்படுத்திக் கொள்ள ஒரு துணை, துயரை பகிர்ந்து கொள்ள புரிதலுடனான தோழமை அவ்வளவே. எவ்வாறான சூழ்நிலையில் தற்கொலைகளை நாடுபவர்கள் கூட ஒரு நிமிடம் தாமதித்தால் அவ் எண்ணப்பாங்கை அகற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அத்துடன் தற்கொலைகளை குறைப்பதற்கான மிக உயர்ந்த தீர்வாக நெருக்கமான உறவுகளுடனான நேரப்பகிர்வே அமையும். உறவுகளுக்காக நேரம் ஒதுக்குதல் என்பது ஒரு உயிரை வாழவைக்கும் செயற்பாடு என்பதை மக்கள் ஒவ்வொருவரும் உணர்தல் அவசியம். நம்பிக்கையான கருத்துக்களை பகிர்தல், நேர்மறையான வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தல், பாதிக்கப்பட்டவரை தனிமையில் விடாமல் இருத்தல் போன்றவற்றை கைக்கொள்ளல் சிறந்தது.

தற்கொலை எண்ணத்தை அகற்றுவதற்கு பிரதானமாக குறித்த எண்ணத்திற்கான காரணங்களை அறிந்து அகற்றல் அவசியம். இளைஞர்களை தற்கொலை செய்து கொள்வதிலிருந்து தடுக்கும் விதமாக பல தொண்டுநிறுவனங்களும் அவர்களுக்கு ஆலோசனை, அறிவுரை, ஆறுதல் கூறி அவர்கள்தற்கொலை முயற்சியை தடுத்து நிறுத்த முயன்று வருகின்றன. இலங்கையில் தற்கொலைகளை தடுக்கும் நோக்குடன் சுமித்ரயோ என்ற அமைப்பு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் தற்கொலை சம்பவங்கள் மற்றும் தற்கொலை முயற்சிகளை பார்க்கும் போது எம்மவர்கள் தீர்மானிக்கும் ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் இழந்துள்ளனர் என்பதே காண கூடியதாக இருக்கின்றது. பிரச்சனைகளுக்கு தற்கொலை தீர்வாகாது என்பதையே எல்லா மதங்களும் போதிக்கின்றன. கடவுளால் அருளப்பட்ட உயிரை மாய்த்துக்கொள்ள எவருக்கும் உரிமையுமில்லை, சட்டத்திலும் அதற்கு இடமில்லை. ஆனாலும் அனைத்தும் கற்றுத் தேர்ந்தவர்களாகவே இருந்தாலும் கூட பிரச்சினை எனும் போது எம்மில் பெரும்பாலானோர் தற்கொலையை இறுதி முடிவாகக் கொள்கின்றனர். எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு. ஆனால் அது தற்கொலையாக மாற முடியாது. அதிலும் தம்மை சார்ந்தோரையும் இதற்கு பலிக்கடாவாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக வாழ வேண்டிய பிஞ்சுகளின் எதிர்காலத்தை சிதைப்பது என்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இளைய சமூதாயம் கூட இன்று பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தற்கொலை தான் வழி என்று தேடி செல்லுகின்ற ஓர் நிலையே காணப்படுகின்றது.

மாதூரி

# சுய இலாப அரசியலுக்காக நடத்தப்படும் தொழிற்சங்க போராட்டம்




## திரைமறைவில் நடப்பது என்ன?

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக்கொள்கையை மீளப் பெறுமாறு வலியுறுத்தியும். வங்கிகடன்வட்டிவீதங்களைக் குறைக்குமாறு கோரியும் இந்த வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஒரு சில தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிக்காத போதிலும். பெரும்பாலான தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டன. அரசாங்கத்திற்கு மீண்டும் ஒருவாரம் கால அவகாசம் வழங்குவதாகவும். ஒரு வாரத்திற்குள் தீர்வு கிடைக்காவிட்டால் மக்களையும் இணைத்துக் கொண்டு வீதிக்கிறங்கி பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

கொரோனா காலக்கட்டத்தின் பின்பு இன்று வரை தொடர்ச்சியாக ஒவ்வொரு விடயங்களுக்காக போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமே காணப்படுகின்றது. இதனால் அதிகளவில் பாடசாலை மாணவர்களே பாதிக்கப்படுகின்றார்கள். ஆனால் இதை அரசியலுக்காக மாணவர்களின் கல்வியை இன்னும் பின் நிலைக்கு கொண்டு செல்லுகின்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்றது. ஆனால் மாணவர்களின் பரீட்சையை நிறுத்தி தொழிற்சங்கங்கள் போராட வேண்டிய தேவை இந்த காலப்பகுதிக்கு இது தேவையில்லை. ஏற்கனவே சம்பள போராட்டம் மூன்று மாதத்திற்கு மேலாக கடுமையான போராட்டத்தை செய்து அதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது என கூறி போராட்டம் விம்பம் மாற்றப்படும் என சொல்லி ஆசிய தொழிற்சங்கங்கள் எல்லாம் இணைந்து முடிவெடுத்தது. ஆனால் ஆறு மாதங்களுக்கு போராட்டங்களை ஓய்வு நிலையில் விட்டுவிட்டு திரும்பவும் அதே மாதிரி மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் கைவைத்திருக்கின்றார்கள். தேர்தலுக்காக அரசியல் நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்காக போராட்டங்கள் நடத்துவது வேறு என்றாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதிப்புக்குள்ளாக்குவது தவறு. பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கின்ற பொழுது போராட்டங்கள் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனென்றால் கொரோனா காரணத்தினால் கல்வி மிக நீண்ட கால பாதிப்பினால் கல்வி கற்கும் தரத்தில் ஒரு ஆண்டு அடிப்படையில் பிந்தியிருக்கின்றது. பலர் என்ன சொல்லுகின்றார்கள் என்றால் ஒருவர் ஐயோ என்று கத்தும் பொழுது அனைவரும் கத்துவார்கள். அனைத்து பாடசாலைகளும் சேர்ந்து அவர்கள் எதற்காக இந்த போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள் சம்பளத்தை கூட்டுவதா 2/3 வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். தொழிற்சங்கங்களின் கூட்டு அறிக்கை என்று கூறி சமூக வலைத்தளங்களில் உலாவுகின்றதே தவிர தொழிற்சங்கங்களை சேர்ந்த தலைவர்கள் எல்லோரும் ஒரு இடத்தில் இருந்து அறிக்கைவிடவில்லை. சமூக வலைத்தளங்களில் வெறுமனே செய்தியாக வெளியிடுகின்றார்களே தவிர அனைவரும் ஓரணியில் இருந்து ஏனைய சங்கங்கள் எல்லாம் ஓரணியில் சேர்ந்து ஒரு அறிக்கையை விடவில்லை. அல்லது ஜே.வி.பி தங்களது அரசியல் நடவடிக்கையை வளர்த்துக்கொள்வதற்கு பார்க்கின்றார்களா என்றவொரு கேள்வியும் எழும்புகின்றது. தொழிற்சங்கங்கள் ரீதியாக அவ்வாறானதொரு நகர்வை அவர்கள் நகர்த்தக் கூடியதாக இருக்கின்றது.

ஏனென்றால் உள்ளூராட்சிமன்ற தேர்தலை ஆசிரியர் போராட்டத்துடன் இவர்கள் தொடர்புபடுத்தத் தேவையில்லை ஏனென்றால் ஆசிரியரின் தொழிற்சங்கத்துடன் தொடர்புபடுத்துவதால் ஆசிரியர்களின் பாடசாலை புறக்கணிக்கப்படுவதால் கல்வி நிலை பின்தள்ளப்படுகின்றது. எனவே மக்கள் விடுதலை முன்னணி அல்லது ஏனைய எந்த கட்சிகளாக இருந்தாலும் கூட தங்களுக்குரிய அரசியல் இலாபத்திற்காகத் தான் பயன்படுத்த எத்தணிக்கின்றார்கள் அதில் மாற்றுக்கருத்தில்லை. அனைவருமே அதைத்தான் சிந்திக்கின்றார்கள். இதற்குள் உள்ளூராட்சி என்ற வசனத்தை கையாளத்தேவையில்லை தானே. உதாரணத்திற்கு 25 சதவீதமான மாணவர்கள் இயல்பாகவே பாடசாலைக்கு போகவில்லை எனவே அந்த சதவீதத்தை இன்னும் கூட்டுவதாகத் தான் அமையப்போகின்றது இந்த போராட்டம். ஸ்டாலினின் முன் நடப்புகள் கூடுதலாக அரசியலுடன் ஒத்துபோகின்ற மாதிரியான நகர்வுகளைத்தான் சில கட்சி சார்ந்த போராட்டங்களை நடத்துவதாக தான் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் வந்திருக்கின்றது. இதனால் பாதிக்கப்படுவது பரீட்சை எழுதுகின்ற மாணவர்கள் உட்பட தேர்தலில் வாக்காளர்களாக ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 2000 பேர் இருக்கின்றார்கள் இவர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர் எந்த சுயலாபத்தின் அடிப்படையில் வந்து செயற்படுகின்றார் என்பது ஒரு விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. இதற்கு தகுந்த ஆதாரமாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான உப தலைவராக இருப்பவர் தான் யாழ் மேயர் வேட்பாளர். அவர் அனைத்து இடங்களிலும் கூறியதாவது இலங்கை ஆசிரியர் சங்கள் கட்சி சார்ந்த செயற்பாட்டில் ஈடுபடவில்லை என்று ஆனால் அவர் வேட்புமனுவை தாக்கல் செய்து தமிழ் தேசிய முன்னணியிடம் வேட்பாளராக இருக்கின்றார் அவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் அதே போன்று குறிப்பிட்ட இந்த 2000 பேருக்கு மேற்பட்டவர்கள் கூடுதலாக ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்குரிய ஒட்டுமொத்தமான தேர்தல் அரசியல் இலாபத்தை தேடுவதற்காக நாட்டில் உள்ள ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் தங்களுக்குள் உள்வாங்கிக்கொண்டு இந்த போராட்ட அரசியலுக்குள் கலந்திருக்கின்றார்கள்.

கடந்த கால போராட்டத்தில் ஜோசப் தமிழ் சங்கமும் இனவாத அடிப்படையில் அங்கு சுகயீன போராட்டம் நடத்தும் பொழுது இங்கு கறுப்பு கொடி கட்டிக்கொண்டு போராட்டம் நடந்தது போராட்டத்தை காட்டிக்கொடுத்த அடிவருடிகளாகத் தான் அவர்கள் இருக்கின்றார்கள் அந்த காலத்தில் ஜோசப் ஓய்வு பெற்ற ஆசிரியராக செல்லக்கூடிய நிலையில் தான் இருக்கின்றது. எனவே அப்படி இருக்கின்றவர் ஏன் இந்த கல்வி சமூகத்தில் கொரோனா வினால் கல்வி பாதிப்படைந்து தற்பொழுது மீண்டும் முன்னோக்கி வரும்பொழுது ஒட்டுமொத்தமான கல்வி சமூகத்தையும் அரசியல் பின்னணிக்குள் கொண்டுபோகின்றார்கள் என்று நோக்கினால் அவர் தனிப்பட்ட ரீதியிலோ எந்தவிதமான கோபமும் இல்லை ஆனால் ஆசிரியர் என்ற ரீதியில் இவர் ஏன் ஒட்டுமொத்தமாக உள்ளூராட்சிமன்ற தேர்தல் என்ற வாக்குமூலத்தை இதற்குள் கொண்டுவர வேண்டும். நாங்கள் ஒட்டுமொத்தமாக போராட்டம் நடத்தும் பொழுது எல்லோரும் ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் ஒத்துழைக்கலாம். அந்த காலப்பகுதியில் அது சரி அதில் அனைத்து தொழிற் சங்கங்களும் இணைந்திருந்தது ஆசிரியர்களுக்குரிய அந்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது அது ஆசிரியருக்குரிய சம்பள போராட்டத்தை மேலெடுத்து செல்லும் என்பதில் எந்தவிதமான நம்பிக்கையும் இல்லை. இது அரசியல் இலாபம் தேடி அவர் அவர் தங்களது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகத்தான் இது உள்ளது.

நோ பேயில் இருக்கின்ற ஆசிரியர்கள் தான் இதில் மும்முரமாக செயற்படுகின்றார்கள். அரச உத்தியோகஸ்தர்கள் போராட்டங்களில் கலந்துகொள்ளக்கூடாது அரசாங்கத்திற்கு எதிராக ஒரு முன்னெடுப்புக்களை செய்யக்கூடாது என அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் தற்பொழுது செய்வதெல்லாவற்றையும் பார்த்தால் நோ பேயில் நிற்கின்ற அரச ஊழியர்கள் இவ்வாறு செய்யும் பொழுது அது மாணவ சமூகத்தை பாதிக்கும் என்று அவர்களுக்கு தெரியாதா? என்ற கேள்வியும் எழும்பியுள்ளது. எதிராக போராடிய நபர்களே மாணவர்களின் கல்வி தங்களால் பாதிக்கப்படும் என்பதனை அறிந்து கொண்டு தங்களது அரசியல் தேவைக்காக அவர்களை கைக்கூலிகளாகத்தானே பயன்படுத்துகின்றார்கள். அவர்கள் துணை போகின்ற பொழுது எதிர்காலத்தில் தமிழ் சமூகமாக இருந்தால் என்ன சிங்கள சமூகமாக இருந்தால் என்ன முஸ்லீம் சமூகமாக இருந்தால் என்ன எந்த சமூகத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அப்பாவி மாணவர்களினுடைய கல்வி பாதிக்கப்படும் என்பது அவர்களுக்கு தெரியும். கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. குண்டு வெடிப்பு காலத்திலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதெல்லாம் தெரிந்து கொண்டு அவர்கள் தங்களது இலாப நோக்கத்தை கருதிக்கொண்டு செயற்படுத்துகின்ற பொழுது அவர்கள் ஆசிரியர்களும் அது சார்ந்த தெளிவான விழிப்புணர்வுகள் இல்லாது அவர்கள் ஈடுபடுவதை தடுக்க முடியாமல் இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் சில குறிப்பிட்ட குறுகிய நோக்கிற்காக அவர்கள் அவ்வாறு செயற்படுகின்றார்கள். தொழிற்சங்கங்களுக்குள் கருத்தியல் அடிப்படையில் இவர்கள் மாறுபட்டு தான் நிற்கின்றார்கள். உதாரணமாக இலங்கையில் ஆசிரியர் ரீதியாக 76 தொழிற்சங்கங்கள் இருக்கின்றது. வட மாகாணத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தை ஒரு பலமான கட்டமைப்பு ரீதியாக கொண்டு வந்து செயற்பட வைத்திருக்கின்றது. அவ்வாறுஇருந்தவர்களை சுயாதீனமாக செயற்படவிடாது முழுமையாக ஒரு அரசியல் சார்ந்த செயற்பாட்டை நகர்த்த தொடங்கும் பொழுது தான் எங்களது வரலாறு பிழையானதாக இருக்கின்றது. காக்கை வன்னியன் மாதிரியோ எட்டப்பன் மாதிரியோ எழுதப்படக்கூடாது. அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு தான் நாங்கள் கூறுவது என்னவென்றால் ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கு பின்னணியாகத்தான் ஒவ்வொரு தொழிற்சங்கங்களும் செயற்படும். ஆசிரியர் நலன் சார்ந்து செயற்படுவதாக கூறி ஆரம்ப காலத்தில் நடந்த 2/3 சம்பள முரண்பாடு தீர்க்கின்ற பொழுது எல்லாரும் ஓரணியில் இருந்தார்கள். பிரச்சனை என்று வருகின்ற பொழுது ஓரணியில் இருக்கின்றார்கள் பின்னர் அரசியல் இலாபம் தேடும் பொழுது பிரிந்துவிட்டு அவர்கள் சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களை நம்பியிருந்த பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் மீண்டும் அவர்கள் வறுமை நிலைக்குத் தானே தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

தொழிற்சங்க போராட்டங்களை தொடர்ந்தும் முடக்குவதால் போக்குவரத்து உட்பட வர்த்தகம் போன்றவை பாதிப்புக்கு உள்ளாகின்ற நிலைமை தான் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனால் மேலும் மேலும் இந்த நாட்டின் பொருளாதாரம் முடங்கிப்போகின்ற கட்டம் தான் ஏற்படும். பொதுவாக ஆசிரியர் அதிபர் கல்வி சார் போராட்டங்கள் பற்றிய அனுபவம் தான் இவற்றுக்குள் கூடுதாக இருக்கின்றது. ஏனைய அனைத்தையும் முடக்குவதால் பொருளாதாரம் இன்னும் பின்தள்ளப்படுகின்றது.

எவ்வாறாயின் காலையில் ஒரு கூலிவேலைக்கு அல்லது வியாபாரத்திற்கு போகின்றார் அவர் தன்னுடைய வேலையை செய்யாமையினால் அவரது வீட்டில் இன்னும் வறுமை நிலை தான் அதிகரிக்கின்றது. வறுமை அதிகரிப்பதுடன் இன்னும் பொருளாதார சிக்கல் அதிகரிக்கும். இன்று எத்தனையோ பேர் எத்தனையோ வேலைகளுக்கு போக ஆரம்பித்து வீட்டில் நிற்பதற்கு ஏனைய நாட்டவர்கள் இங்கு முதலீடு செய்வதற்கு மேலும் பொருளாதார ரீதியிலான நெருக்கடியை கொண்டு வரும் அதில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆனால் இது உண்மையாகவே உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட இருக்கின்ற 8 ஆயிரம் பேருக்கும் மேற்பட்ட அரச ஊழியர்களில் பயன்படுத்தியிருக்கின்றார்கள் அவர்கள் தேர்தலை நடத்துவதற்காக ஏனைய அரச ஊழியர்களையும் பயன்படுத்தி ஒரு குறுகிய இலாபத்திற்காக சமூகத்தை மேலும் பொருளாதார நெருக்கடியில் நாட்டை மேலும் பின்னுக்கு தள்ளும் நடவடிக்கைக்கு தான் கொண்டுசெல்லும் இதில் எந்தவிதமான பொருளாதார நெருக்கடிக்கோ அல்லது ஆட்சி மாற்றத்திற்கோ இது வழிவகுக்காது.




இரணியன்

# பிராந்திய செய்திகள்

## மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் புதிய அலுவலகக் கட்டிடம் திறந்து வைப்பு

மட்டக்களப்பு மாவட்ட மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அரசாங்கத்தினால் பின் தங்கிய பிரதேச மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை கல்வி அமைச்சினால் இரண்டு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா (18) நடைபெற்றது. மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளரும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமான அகிலா கனகசூரியம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் கலந்து சிறப்பித்தார்.




அதிகள் வரவேற்பு, தேசிய கொடியேற்றம் தேசிய கீதம், வலய கீதம் இறை வணக்கம் போன்ற நிகழ்வுகளுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன், முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியநாதன் மற்றும் பொறியியலாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது பாடசாலை மாணவர்களின் நடனங்களும் இடம்பெற்றது. இடப் பற்றாக்குறையுடன் இயங்கிவந்த இவ் கல்வி அலுவலகம், இப்புதிய கட்டிடம் அமையப் பெற்றதன் மூலம் இடவசதி ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## யுவதியிடம் கைபேசி பறித்த நபர் அயலவரின் ஒத்துழைப்புடன் கைது



நுவரெலியாவில் வீதியில் நடந்து சென்ற யுவதியிடம் கைத்தொலைபேசியை பறித்துக்கொண்டு தப்பியோடிய நபரை அக்கம் பக்கத்தினர் மடக்கிப் பிடித்துள்ளனர். சந்தேக நபர் 27 வயதுடைய இளைஞன் என்பதுடன், யுவதி ஒருவரின் கைத்தொலைபேசியைப் பறித்த போது அவர் உதவி கோரி அலறியுள்ளார்.

இதையடுத்து அருகில் இருந்தவர்கள் சந்தேக நபரை மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். அன்று(18) பிற்பகல் நுவரெலியா பஸ் நிலையத்துக்குப் பின்னாலுள்ள உத்யான வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நுவரெலியா களுகெலே பிரதேசத்தில் வசிக்கும் இளைஞராவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்ப்பாணத்திலும் காற்று மாசு அதிகரித்துள்ளது

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் முக்கிய 7 நகரங்களின் வளிமண்ட லத்தில் நுண்துகள்களின் அளவு அதிகரித்துள்ளது. எனவே சிறுவர்கள், முதியவர்கள் சுவாசம் சம்பந்தமான பிரச்சினைகள் உள்ள வர்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்று தேசிய கட்டிட ஆராயச்சி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்த்தன தெரிவித்துள்ளார்.



காற்று மாசுபாடானது யாழ்ப்பாணத்தில் 120 (ஏ. கியூ. ஐ), கொழும்பு – 142 குருநாகல் – 117, கண்டி – 103, கேகாலை –106, புத்தளம் – 129, பதுளை – 109 என்று பதிவானதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக காற்று மாசுபாடு அதிகரித்தும் குறைந்தும் வருவதாக சுவிற்சர்லாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் காற்றின் தரம் குறித்த தரவுச்சுட்டியை வெளியிடும் இணையத்தளமும் தரவுகளை வெளியிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## திருமண வைபவத்தில் கைகலப்பு – ஒருவர் பலி

அங்குருவாதொட்ட பட்டகொட சந்தியில் திருமண வைபவம் ஒன்றில் அன்று (17) இரவு இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



உயிரிழந்த நபரின் சடலம் அன்று(18) அதிகாலை படகொடை வயல் வெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் பட்டகொட யதவர பிரதேசத்தைச் சேர்ந்த மங்கள பிரேமவர்தன என்ற 36 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த இரு குழுக்களைச் சேர்ந்த 5 பேர் கொழும்பு, நாகொட மற்றும் ஹொரணை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பட்டகொட பிரதேசத்தில் திருமண வைபவம் ஒன்றின் போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி படகொட சந்தியில் மோதல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. அங்குருவாதொட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் சரியான திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டும்

2022 இல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் விவசாய கைத்தொழில், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளும் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இதுபொருளாதாரத்தின் 7.8% வீழ்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் பின்னடைவை மாற்றியமைக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான சரியான திட்டங்களை அரசாங்கம் தயாரிக்க வேண்டும் என்றும் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆரம்க கல்வி மாணவர்களுக்கு இலவச அரிசி

மலையக பகுதிகளில் உள்ள ஆரம்பக் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இன்று கைச்சாத்திடப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனமான 'Good Neighbors International திட்டத்துக்கான பங்களிப்பை வழங்குகின்றது.

இதன்படி மலையகத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்ப பிரிவு பாடசாலைகளுக்கு ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி வழங்கப்படவுள்ளது. புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக திட்டம் செயல்படுத்தப்படும். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மாணவர்களின் இடைவிலகளை தடுப்பதற்காக இந்த திட்டம் ஆரம்பமாகின்றது.



## தபால் மூல வாக்களிப்பு ஒத்திவைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூல வாக்குசீட்டுகள் கிடைக்காத காரணத்தினால் இம்மாத இறுதியில் தபால் மூல வாக்களிப்பை மேற்கொள்ள முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை அரசு அச்சகத்திலிருந்து தபால் மூல வாக்குசீட்டுகளை தேர்தல் ஆணைக்குழு பெறவில்லை. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தபால் மூல வாக்குசீட்டுகளை வாக்குச்சாவடிகளுக்கு வழங்க தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டிருந்தது.



# சினி துளிகள்




## நடிகை அஞ்சலிக்கு விரைவில் திருமணமா?



தென்னிந்திய சினிமாவின் பிரபல நடிகைகளில் ஒருவர் தான் அஞ்சலி. இவர் இயக்குனர் ராம் இயக்கத்தில் ஜீவா நடிப்பில் 2007 -ம் ஆண்டு வெளியான கற்றது தமிழ் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் என்ட்ரி கொடுத்தார்.

அஞ்சலி தமிழ் மொழியை தாண்டி தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற அனைத்து மொழி படங்களிலும் நடித்துள்ளார். தற்போது இவர் ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் RC15 படத்தில் நடித்து வருகிறார். அஞ்சலி நடிகர் ஜெய்யை காதலிப்பதாக பல செய்திகள் வெளிவந்தது ஆனால் இதற்கு அஞ்சலி மறுப்பு தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து அஞ்சலி பிரபல இயக்குனரை திருமணம் செய்ய போகிறார் என்று சினிமா வட்டாரங்களில் கூறப்பட்டது. இது பொய்யான செய்தி என்று அஞ்சலி வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இந்நிலையில் அஞ்சலி தனது பெற்றோர்கள் சம்மதத்துடன் பிரபல தொழிலதிபரை திருமணம் செய்துகொள்ள போகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் இது குறித்து அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வரவில்லை.

## ஒரு படத்திற்காக இரண்டு வருட சினிமா வாழ்க்கையை பணயம் வைக்கும் சாய் பல்லவி

கிளாமர் இல்லாமல் நடித்து மக்கள் மனதில் இடம்பிடித்தவர் நடிகை சாய் பல்லவி. நடிப்பு மட்டுமின்றி இவருடைய நடனத்திற்கும் ரசிகர்கள் பட்டாளம் அதிகம். கடந்த வருடம் இவர் நடிப்பில் கார்கி படம் தமிழில் வெளிவந்தது. மேலும் தெலுங்கு விரடா பருவம் படத்தில் நடித்திருந்தார். இதில் கார்கி நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், அடுத்ததாக சாய் பல்லவி நடக்கவிருக்கும் படம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அல்லு அரவிந்த் தயாரிப்பில் உருவாகவிருக்கும் ராமாயணம் படத்தில் சீதையாக நடிக்க சாய் பல்லவி முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கின்றனர். இப்படத்தில் நடிப்பதற்காக இரண்டு வருடங்கள் கால்ஷீட் கொடுத்துள்ளாராம் நடிகை சாய் பல்லவி. இப்படத்தில் நடிக்க இந்த இரண்டு வருடத்தில் வேறு எந்த படத்தில் சாய் பல்லவி நடிக்கமாட்டார் என கூறப்படுகிறது. ஒரே ஒரு படத்திற்காக இரண்டு ஆண்டு சினிமா வாழ்க்கையை சாய் பல்லவி பயணம் வைக்கிறாரே என இப்போதே திரை வட்டாரத்தில் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.



தமிழில் கார்த்தியுடன் சுல்தான் படத்தில் நடித்து பிரபலமான ராஷ்மிகா மந்தனா தொடர்ந்து விஜய் ஜோடியாக வாரிசு படத்தில் நடித்தார். தெலுங்கு, கன்னட மொழிகளில் அதிக படங்களில் நடித்து இருக்கிறார். இவர் நடித்த புஷ்பா படம் ராஷ்மிகாவின் சினிமா பயணித்தில் திருப்புமுனையாக அமைந்தது. இந்தி மொழி படங்களிலும் நடிக்கிறார். ராஷ்மிகா ஏற்கனவே கன்னட நடிகர் ரக்ஷித் ஷெட்டியை ராஷ்மிகா காதலித்தார். 2017-ல் இவர்களுக்கு திருமண நிச்சயதார்த்தமும் நடந்தது. ஆனால் அடுத்த வருடமே கருத்து வேறுபாடு ஏற்பட்டு திருமணத்தை ரத்து செய்து பிரிந்தனர்.

பின்னர் தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவுடன் இணைத்து பேசப்பட்டார். இருவரும் மாலத்தீவுக்கு ஜோடியாக சென்று வந்ததாகவும் கிசுகிசுக்கள் வந்தன. இதனை இருவரும் மறுத்தார்கள்.

இந்நிலையில் 23 வயது இளம் கிரிக்கெட் வீரர் சுப்மன் கில் மீது 26 வயது ராஷ்மிகாவுக்கு காதல் ஏற்பட்டு உள்ளதாக கிசுகிசுக்கள் கிளம்பி உள்ளன. ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற ராஷ்மிகாவிடம் சுப்மன் கில் மீது உங்களுக்கு ஈர்ப்பு இருக்கிறதா? என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு ஆமாம் என்று கண்ணடித்தபடி சிரித்தார். இதையடுத்து இருவரும் காதலிப்பதாக வலைத்தளங்களில் தகவல் பரவி வருகிறது. சுப்மனும் ஏற்கனவே ராஷ்மிகா மீது தனக்கு ஈர்ப்பு இருப்பதாக தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 23 வயது கிரிக்கெட் வீரருடன் ராஷ்மிகா காதல்?





## டாடா படத்திற்கு பிறகு சம்பளத்தை உயர்த்திய கவின்

விஜய் டிவியில் ஒளிபரப்பான சரவணன்-மீனாட்சி சீரியல் மூலம் தமிழ் ரசிகர்களை கவர்ந்தவர் தான் கவின். இவர் சில படங்களில் குணச்சித்திர கதாப்பாத்திரத்திலும் நடித்துள்ளார். கவின் அதன் பின் பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று கடைசி சுற்று வரை முன்னேறினார். அதன் மூலமாக் அவருக்கு ரசிகர் கூட்டம் அதிகமானது.

சமீபத்தில் இவர் நடிப்பில் "டாடா" திரைப்படம் வெளியானது. இதில் அபர்ணா தாஸ், பாக்யராஜ், விடிவி கணேஷ் போன்ற பிரபலங்கள் நடித்திருந்தனர். இப்படம் வெளியாகி சில நாட்களிலேயே பல கோடி வசூல் செய்தது. தற்போது டாடா அமேசான் ப்ரைம் தளத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில் கவின் டாடா படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து இனி அவர் நடிக்கவிருக்கும் படங்களுக்கு சம்பளத்தை ரூ.1.50 கோடியாக உயர்த்தியுள்ளதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

## கடும் நஷ்டத்தை சந்தித்துள்ள அகிலன் திரைப்படம்

ஜெயம் ரவியின் அகிலன் திரைப்படம் மார்ச் 10ம் திகதி வெளியாகி இருந்தது. கல்யாண கிருஷ்ணன் இயக்கத்தில் ஜெயம் ரவி-ப்ரியா பவானி ஷங்கர் முதன்முறையாக ஜோடி சேர்ந்து நடித்துள்ள இப்படம் பெருங்கடலில் அரசுக்கு எதிராக நடக்கும் விஷயத்தை மையமாக கொண்டு உருவாகி வெளியானது.

படத்திற்கு முதல் நாளில் நல்ல வரவேற்பு கிடைத்தது. ஆனால் அடுத்தடுத்து விமர்சனங்கள் கொஞ்சம் மோசமாக வர படத்தின் வசூலும் குறைந்தது.

தற்போது படம் அகிலன் திரைப்பயணத்தில் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளதாக கூறப்படுகிறது. ஜெயம் ரவியின் திரைப்பயணத்தில் இது மோசமான வசூல் செய்த படமாக அமைந்துள்ளதாம். இது ரசிகர்களுக்கு கடும் சோகத்தை கொடுத்துள்ளது.



## ராம்சரணின் ஆர்சி15 படத்தின் தலைப்பு

தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம்வரும் ஷங்கர், தெலுங்கு நடிகர் ராம்சரணை வைத்து புதிய படம் ஒன்றை இயக்குகிறார்.

இப்படத்தை பிரபல தெலுங்கு தயாரிப்பாளர் தில் ராஜ" பிரம்மாண்டமாக தயாரிக்கிறார். ஆர்.சி.15 என தற்காலிகமாக பெயர் வைக்கப்பட்டிருக்கும் இப்படத்தில் ராம்சரணுக்கு ஜோடியாக கியாரா அத்வானி நடிக்கிறார்.



இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக ஹைதராபாத்தில் உள்ள சார்மினாரில் நடைபெற்று வருகிறது.

ஆர்சி15 படத்தில் நடிகர் ராம் சரண் 80 வினாடிகளுக்கு தொடர்ந்து நடனமாடவுள்ளதாக பேசப்பட்டது. இந்நிலையில் ஆர்சி15 படத்தின் தலைப்பு குறித்த தகவல் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அதன்படி இப்படத்திற்கு சிஇஓ (CEO - Chief Electoral Officer) என்று பெயரிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் இப்படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ ராம்சரணின் பிறந்தநாளை முன்னிட்டு வருகிற மார்ச் 27ம் திகதி வெளியாகும் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி



**12**

விடுதலைப்புலிகளின் வழிகாட்டி அணிகள் முன்னாலே நகர்கின்றது. எதிர்பார்த்தது போன்று கொழும்பு வீதியில் தாக்குதல் தொடங்குகிறது. இது ஒரு வழமைக்கு மாறாக கடுமையான தாக்குதலாக இருந்தது. ஒருசில அணிகள்பாதையைகடந்துவிட்டனமேலும்சில அணிகள் பாதையை கடக்கவேண்டியுள்ளது. இவர்கள் கடந்து செல்வதற்கு வசதியாக ஏனைய அணிகள் எதிரி மீது கடுமையான தாக்குதலை நடத்திக்கொண்டு இருந்தார்கள். எதிரி உக்கிர தாக்குதலை இவ்விடத்தில் நடத்திக்கொண்டு இருந்தான். ஒரு கட்டத்தில் நேரடி சண்டைகளை தவிர்த்து அப்பகுதி எங்கும் கடுமையான எறிகணை தாக்குதலை நடத்த தொடங்கினார்கள்.

அத்துடன் தாக்குதல் உலங்கு வானுர்திகளும் அவ்விடத்திற்கு வந்து கடுமையான தாக்குதலை நடத்த தொடங்கின. மிக மோசமாக நடத்தப்பட்ட தாக்குதலில் சிக்கிய போராளிகளின் அணி காட்டில் சிதறுகிறது. அதாவது தனித்தனியாகவும் குழுக்களாகவும் காடுகளுக்குள் பிரிந்து விடுகிறார்கள். தாக்குதல் சற்று ஒய்வு நிலைக்கு வந்த பின்னர் வழிகாட்டி போராளிகள் வேகமாக செயற்பட்டு போராளிகளை தேடிபிடித்து ஒன்றிணைத்தார்கள். அத்துடன் இந்த தாக்குதலில் போராளிகள் பலர் காயமடைந்தும் சிலர் வீரச்சாவை அடைந்தும் இருந்தார்கள். வீரச்சாவடைந்தவர்கள் அருகிலுள்ள இடங்களில் புதைக்கப்படுகிறார்கள். காயமடைந்தவர்களை காவிக்கொண்டு வன்னிசெல்லும் அணி கொழும்பு வீதிய கடந்து வன்னி செல்லும் காட்டுக்குள் நுழைகிறது. வன்னி செல்லும் காட்டிற்குள் நுழைந்துவிட்டால் பிரச்சனை தீர்ந்து விட்டது என்று அர்த்தமில்லை வடக்கில் இருந்து கிழக்கிற்கும் கிழக்கில் இருந்து வடக்கிற்கும் தரை வழியாக பயணம் செய்வது என்பது மிகவும்நீண்டதும்உயிராபத்துமிக்க பயணமிது போகும் போது கொண்டு செல்லும் தண்ணீர் முடிவடைந்து ஒரு கட்டத்தில் குடிக்க நீர் கூட இருக்காது. உணவு தீர்ந்து போயிருக்கும் ஆனாலும் தொடர்ந்து நடக்கவேண்டியிருக்கும் போகும் போதே பல போராளிகள் நீரின்றி மயங்கி விடுவார்கள். சிலர் நடக்க முடியாமல் தளர்வடைந்து விடுவார்கள் அத்துடன் இந்த பயணத்தில் ஒரு போராளி தனக்குரிய துப்பாக்கி ரவைகள் உடைகள் இவற்றுடன் மேலதிகமாக சில பொருட்கள் அத்துடன் காயமடைந்த போராளிகளையும் சுமந்து கொண்டு தான் செல்ல வேண்டும்.

இடையில் பெரிய பெரிய ஆறுகளையும் கடக்க வேண்டும். அத்துடன் எதிரியின் நடமாட்டங்களையும் அவதானித்து கொண்டே பயணம் செய்ய வேண்டும். என்பதால் காட்டினுள் பயணம் என்பது மிக மெதுவாகத்தான் இருக்கும் அடர்ந்த காட்டில் சில மைல்கல் நகர்வது என்பது பெரும்பாடாக இருக்கும். இந்த நீண்ட பயணத்தின் போது உடனடியாக சிகிச்சை வழங்க முடியாது. காயமடைந்த போராளிகளில் சிலர் வீரச்சாவு அடைந்த நிகழ்வுகளும் நடந்ததுண்டு. அவ்வாறு வீரச்சாவு அடைந்தால் அவர்களை அவ்விடத்திலேயே மரியாதையுடன் விதைத்து விட்டுபயணம்தொடரும். இவ்வாறுதான் அன்று மட்டக்களப்பில் இருந்து பெரும் அணியொன்று சில முக்கிய தளபதிகள் பொறுப்பாளர்களுடன் வந்த போது இந்த சண்டை வெடித்திருந்தது. சண்டையை முடித்து கொண்டு காட்டு வழியாக நடந்து புல்மோட்டைக்கு அருகில் கொக்குதொடுவாய்க்கு இடையில் ஒரு கடற்கரையை வந்தடைந்தது. அந்த இடத்தில் சில வேளைகளில் சிறிலங்கா படையினருடன் சண்டையிட வேண்டிய சூழல் வரும் என்பதால் போராளிகள் அதற்கான தயார் நிலையிலே நின்றிருந்தார்கள். முல்லைத்தீவில் இருந்து கடற்புலிகளின் படகு அணிகள் அங்கு வரவேண்டியிருந்தது. அவர்கள் வந்தே கடல்வழியாக வன்னிக்கு செல்ல முடியும். நாயர்ருக்கு அண்மையாக செம்மலை அளம்பில் கடற்பகுதியில் கடற்புலிகளின் பாரிய தளம் ஒன்று இருந்தது. இந்த தளம் இருப்பது யாருக்கும் அன்று பெரிதாக தெரிந்திருக்கவில்லை. இது மிகவும் இரகசியமாய் விடுதலை புலிகளால் பேணப்பட்டு வந்தது. இங்கு கடற்புலிகளின் கடற்கண்காணிப்பு கருவி பொருத்தபட்ட ராடார் தளம் கூட இருந்தது. இங்கு தான் கடற்புலிகளின் தாக்குதல் அணியுடன் கரும்புலி படகுகள் களம் நோக்கி விரையும். புல்மோட்டையை அண்மித்த கரையை விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அணி வந்து விட்டது என்ற செய்தி தொலைத்தொடர்பில் பரிபசையில் இத்தளத்திற்கு எடுத்து கூறப்பட்டது.

இதையடுத்து கடற்புலிகளின் படகு அணிகள் கடலில் இறக்கபட்டன. கடற்புலிகளின் படகுகள் கடலில் இறங்கி விட்டதையும் திருமலை நோக்கி அவை நகர்வதையும் திருகோணமலையில் உள்ள சிறிலங்கா கடற்படை தலைமையாக ராடாரில் அவர்கள் கண்காணித்து விடுவார்கள். அத்துடன் மணித்தியாலயத்திற்கு இரண்டு டோற என்ற வீதம் காங்கேசன்துறைக்கும் - திருமலைக்கும் இடையே சுற்றுகவல் இடம்பெற்று கொண்டிருக்கும். இவர்களின் கண்களில் சிக்குபடாமல்தான் பயணம் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு கண்டாலும் கடற்புலிகளின் பெருமளவு படகுகள் படகுகள் அணிகளை கண்டால் சிறிலங்கா கடற்படை படகுகள் நெருங்கிவராது. அவ்வாறு நெருங்கி வந்தால் அது தற்கொலைக்கு சமமானது என்பது அவர்களுக்கு தெரியும். இவ்வாறான சம்பவங்களில் பலவற்றில் தமது டோராக்களையும் கடற்கலங்களையும் இழந்த அனுபவம் சிறிலங்காவுக்கு உண்டு.

எனினும் சில வேளைகளில் கடற்சமர் வெடித்து விடும் திருமலையில் இருந்து சிறிலங்கா கடற்படையின் டோற படகுகள் தாக்குதலுக்கு வரும். கொக்குதொடுவாய் புல்மோட்டை வரையான கடற்பரப்பில் இரு தரப்பின் இடையே கடும் சமர் நடைபெறும். என கரும்புலி படகுகள் கூட இதன் போது வெடிக்கும். டோற படகுகள் மூழ்கடிக்கபடும். இவ்வாறுதான் சிறிலங்கா கடற்படையினருடன் மோதி கடற்புலிகளின் படகுகள் அந்த பகுதியை வந்தடைய முடியும். அதே வேளை இவர்கள் படகில் ஏறும்போது கூட கடற்புலிகளின் தாக்குதல் படகுகள் ஒருபுறம் சிறிலங்கா கடற்படையை துரத்தி துரத்தி அடித்துக்கொண்டு இருப்பார்கள். படகில் ஏறியவர்கள் செம்மலை அளம்பில் கடற்கரையில் கொண்டுசென்று இறக்கபடுவார்கள். இறங்கும் இடங்களை கடற்படையினர் அறிவித்தால் அவ்விடத்திற்கு சிறிலங்கா வான்படை கிபீர் விமானங்கள் வந்து தாக்குதலை நடத்தும். இவற்றை எல்லாம் எதிர்கொண்டுதோன் மட்டக்களப்பில் இருந்து போராளிகள் வன்னியை வந்தடைகிறார்கள். குடும்பிமலை கரடியனாறு குறிப்பாக சில முதன்மை இடங்களை பிடித்த சிறிலங்கா படையினர் சிங்க கொடிகளை அங்கு ஏற்றி குதூகலித்து மகிழ்ந்தார்கள். கிழக்கின் உதயம் என்ற பெயரில் மட்டக்களப்பு மண் மீட்கப்பட்டுள்ளதாக (2007) இன் இறுதி பகுதியில் சிறிலங்கா அரசு அறிவிக்கிறது. படுவான்கரையில் சில இடங்களுக்கு சிங்கள பெயர்கள் சூட்டுகின்றார்கள். தாண்டியடி பிரதேசம் சுதந்திரபுர என சிங்கள பெயர் மாற்றபட்டது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மட்டக்களப்பில் படையினரால் ஆக்கிரமிக்கபட்ட நிலையில் அங்கு நின்று போராடிய ஏனைய போராளிகள் அம்பாறை மாவட்ட போராளிகளுடன் இணைந்து கொள்கிறார்கள். போராளிகளில் சிலர் விலகி தங்களின் வீடுகளுக்கு செல்கிறார்கள். இவர்களை அடையாலம் கண்டு பின்னர் கைது செய்தது இவர்கள் மூலம் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுத தளபாடங்கள் சிலவற்றை கண்டுபிடிக்கிறார்கள். சில இடங்களில் சில தொழில்நுட்ப கருவிகளை கொண்டு ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பதை இனம்காண்கிறார்கள்.

இவ்வாறு படுவான்கரையில் விடுதலைப்புலிகள் பயன்படுத்திய விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மோட்டார்கள் என்பன படையினரால் எடுக்கப்பட்டு சிறிலங்கா அரசின் பாதுகாப்பு இணையதளத்தில் ஒளிப்படங்கள் மூலம் காண்பிக்கப்பட்டு இருந்தது. சிறிலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட படுவான்கரை பகுதியின் பாதுகாப்புக்கு என சிறிலங்கா ஊர்காவல் படையினரும் காவல் துறையினரும் முகாம்களை அமைக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சிறிலங்கா படையினரின் சிறப்பு அதிரடி படையினரே பாதுகாப்பில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் மிகவும் கொடூரமானவர்கள் என்பது இவர்கள் நடத்திய பல்வேறு படுகொலைகள் மூலம் அறிந்திருந்த தமிழ் மக்கள் இவர்களது கட்டுபாட்டில் தாங்கள் இருப்பது என்பது ஆபத்து என்பதை உணருகின்றார்கள்.

அதே வேளை படுவான்கரையில் பாதுகாப்பில் உள்ள சிங்கள ஊர்காவல் படையினர் தமிழ் மக்களின் சொத்துக்கள் உடமைகளை சூறையாடி தமது கிராமங்களுக்குள் எடுத்து சென்றார்கள். தமது உடைமைகள் பறிபோனபோதும் அவற்றை பார்த்துகொண்டிருக்க வேண்டிய நிலைமை அங்கிருந்த தமிழ் மக்களுக்கு இருந்தது ஏன் படையதிகாரிகள் கூட தமிழ் மக்களின் சொத்துக்களை வாகனங்களில் ஏற்றி தங்களிடங்களுக்கு கொண்டு சென்றதும் நடந்தது. இவ்வாறு தான் கிழக்கின் உதயம் என்ற பெயரில் மட்டக்களப்பு மண்ணை வல்வளைப்பு செய்து வெற்றி கொண்டாட்டங்களில் சிறிலங்கா அரசு நின்றது. அதன் அடுத்த இலக்காக இருந்தது அம்பாறை.



**தொடரும்...**

02ஆம் பக்க தொடர்ச்சி...

அதே போன்று போரின் இறுதி ஒன்றரை மாதத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கம் காயமடைந்தவர்களை அங்கிருந்து வெளியில் கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டிருந்தது. காயமடைந்தவர்களை இவ்வாறு வெளியில் கொண்டு வந்து புல்மோட்டையில் வைத்து கடற்படையிடம் ஒப்படைத்தனர். இவ்வாறு 350 பேர் வரை தான் கொண்டு வந்தனர். கூறுவது போன்று உயிரிழந்திருந்தால் படுகாயமடைந்தவர்கள் 2 அல்லது 3 ஆயிரம் வரையில் இருந்திருக்க வேண்டும். எனவே பாரிய இழப்பு என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல. ஆனால் போர் இடம்பெற்ற பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு சிறு காயங்கள் ஏற்படுவதை தடுக்க முடியாது. மிகவும் கவனமாக போரை முன்னெடுத்தமையினால் தான் இறுதித் தருணத்தில் 2000 இராணுவம் உயிரிழந்தது. 2008 ஆம் ஆண்டில் முழு வருடத்திலும் 2000 இராணுவமே உயிரிழந்தது. 2009 ஆம் ஆண்டு 4 மாதங்களில் 2000 பேர் உயிரிழந்தனர். கனரக ஆயுதங்கள் இதன் போது பயன்படுத்த வில்லை. நீண்ட தூரம் தாக்கக் கூடிய தன்னியக்க துப்பாக்கிகள் பயன்படுத்தவில்லை. கவனமாக போரை முன்னெடுத்தமையினால் எமக்கு இழப்புகள் அதிகமானது.

**ஆனால் இறுதி போரில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக இலங்கை இராணுவத்திற்கு எதிராக குற்றச்சாட்டுகள் உள்ளதே?**

நாங்கள் பயன்படுத்தவில்லை. அவர்கள் பயன்படுத்தினார்கள். சிறு ரக மோட்டார் குண்டுகளை விடுதலை புலிகள் பயன்படுத்தினார்கள். இராணுவத்திற்கு பாதிப்புகள் ஏற்பட்டன. சிகிச்சைகள் அளித்தோம். எனது இராணுவம் அவ்வாறான ஆயுதங்களை பயன்படுத்தவில்லை. அவை பெற்றுக் கொள்வதும் எளிதான விடயமல்ல. எந்த நாடுகளும் அவ்வாறான ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை. போரின் பின்னரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வில் எவ்விதமான முன்னேற்றமும் இல்லை. நல்லாட்சி அரசாங்கம் அவர்களை கைவிட வில்லை. மிகவும் நட்பு ரீதியாக தமிழ் அரசியல் தலைமைத்துவங்களுடன் அரசாங்கம் கலந்துரையாடி வருகின்றது. முதலமைச்சருடனும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இதனை யாரும் செய்யவில்லை. வடக்கில் வீதிகளை அமைத்தார்கள். அதில் தான் கொள்ளையடிக்க முடியும். இதனை கருத்தில் கொண்டு செயற்பாட்டார்களே தவிர மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கவனம் செலுத்த வில்லை. பாதுகாப்பு செயலாளர் உட்பட சூழ இருந்தவர்களும் அதற்கு ஆலோசனை வழங்க வில்லை. ஆனால் நான் போர் முடிவடைந்த பின்னர் மீள் குடியேற்றம் மற்றும் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பில் திட்டம் ஒன்றை கையளித்தேன். அதனை பொருட்படுத்த வில்லை.

**விடுதலை புலிகளின் சொத்துக்களுக்கு என்ன நடந்தது?**

சிங்கள ஊடகங்கள் பல புலிகளின் தங்கங்கள் தொடர்பில் வெளிப்படுத்தின. ஆனால் அவை குறித்து இன்றும் விசாரணைகள் ஏன் முன்னெடுக்க வில்லை என எனக்கு விளங்கவில்லை. அரசாங்கம் புலிகளின் சொத்துக்கள் மற்றும் தங்கம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என நான் நினைக்கின்றேன். நான் இராணுவ தளபதியாக இருந்த காலப்பகுதியில் 220 கிலோ தங்கம் கிடைத்தது. ஆனால் 110 கிலோ தங்கம் தான் கிடைத்ததாக நான் சிறையில் இருந்த போது பஷில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். சரியாக 50 வீதத்தை எடுத்து விட்டனர். அதன் பின்னரும் பல இடங்களில் தங்கம் கிடைத்தது. புலிகளின் தங்கம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அப்போது அதிகாரத்தில். இருந்தவர்கள் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும். விசேடமாக பாதுகாப்பு செயலாளர் அறிந்திருக்க வேண்டும்.

**இறுதிக்கட்டப் போர் தொடர்பில் இராணுவத்திற்கு எதிராக சர்வதேச குற்றச்சாட்டுகள் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன ?**

சர்வதேசத்தில் இடம்பெயர்ந்தவர்களில் சிலர் பயங்கரவாதத்திற்கு உதவி செய்தனர். இவர்கள் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் பெரிதாக பேசுகின்றனர். ஆனால் இராணுவம் சர்வதேச மற்றும் ஐ.நா. சாசனத்திற்கு மதிப்பளித்து போரை முன்னெடுத்தது. மனித உரிமைகளை மீறுவதற்கு நான் திட்டங்கள் அமைக்கவில்லை. இராணுவ நடவடிக்கைகளின் போது கண்காணிப்பு செய்தேன். வழி நடத்தினேன். போர் வியூகங்களை வகுத்தேன். இவை அனைத்தும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியே முன்னெடுத்தேன். ஆனால் விடுதலை புலிகள் மக்களை கவசமாக பயன்படுத்தினார்கள். அதனை புலிகள் பொறுப்பேற்க வேண்டும். எவ்வாறாயினும் விடுதலை புலிகளிடம் சிறைப்பட்டிருந்த 2 இலட்சம் மக்களை கடும் போராட்டத்திற்கு மத்தியில் மீட்டெடுத்தோம். இந்த கட்டத்தில் இராணுவ அதிகாரிகள் சாதாரண சிப்பாய்கள் கூடுதலாக உயிரிழந்தனர். ஆனால் மக்களை பாதுகாப்பாக மீட்டெடுக்க முன்னுரிமை வழங்கி செயற்பட்டோம். எவ்வாறாயினும் யாராவது தவறு செய்திருந்தால் அதனை தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்க வேண்டும். மொத்த இராணுவத்தின் மீதும் குற்றம் சுமத்த முடியாது. ஆட்சியாளரும் அதனை சூழ இருந்தவர்களும் கொள்ளையடித்து பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்த நிலையில் இராணுவத்திலும் ஒரிருவர் இருக்காமல் இருக்க வாய்ப்பு இல்லை. என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழப்போரின் இறுதிக்கட்டம் என்பது ஒரு இனத்தை அழிக்கின்ற நடவடிக்கையாகவே அரச பயங்கரவாதம் செயற்பட்டது என்பதில் மாற்றுக்கருத்தில்லை யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் அவர்கள் செய்த படுகொலைகளை மூடிமறைப்பதற்கு அரசாங்கம் பல தடயங்களையும் அழித்துவந்தது. குறிப்பாக முள்ளிவாய்க்கால் பகுதிகளில் பெருமளவிலான வாகனங்கள் குவிக்கப்பட்டிருந்த காட்சியை உலகில் அனைவரும் பார்வையிட்டுள்ளனர். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் மாத்திரம் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1 இலட்சத்து 40 ஆயிரம் பேர் ஒட்டுமொத்தமாக கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இது எதுவும் நடக்கவில்லை என்பது போல் அரச தரப்பு ஜெனீவாவில் தங்களது வாதங்களை முன்வைத்திருந்தமை வேடிக்கைக்குரிய விடயமாகும். ஆதாரபூர்வமாக படங்களை வெளியிட்ட சனல் 4 தொலைக்காட்சி மற்றும் இந்திய தொலைக்காட்சி இவைகள் புனைக்கப்பட்டவை என்று இலங்கை அரசு குறிப்பிட்டிருந்தது. அதன் பின்னர் ஜெனீவா அமர்வுகளுக்காக இலங்கையில் இருந்து சென்ற தமிழ் தரப்பு அரச புலனாய்வாளர்களால் மிரட்டப்பட்டு ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்ட விடயங்களும் அரங்கேறியிருந்தது. மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் உண்மைச் செய்திகளை வெளியிட்ட ஊடகவியலாளர்கள் 35 பேரும் அரச தரப்பால் படுகொலை செய்யப்பட்டது. ஊடகவியலாளர்கள் ஈழப்போரின் இறுதிக்கட்டம் தொடர்பிலும் அங்கு நடைபெறுகின்ற மனித படுகொலைகள் தொடர்பாகவும் தெட்டத்தெளிவாக ஆதரங்களுடன் செய்திகளில் வெளியிட்டிருந்தனர் இதில் குறிப்பாக லசந்த விக்ரமதுங்க. பிரதீப் எக்னகொட. டீ. சிவராம் சுகிதரன் விமலராஜன் ஜீ.நடேசன். மற்றும் மூத்த ஊடகவியலாளர்களும் இதில் அடங்குவர். நிலைமை இவ்வாறிருக்க அரசாங்கம் தமிழினத்திற்கு எதிராக செயற்படவில்லை என்றும் தாம் தமிழ் மக்களை விடுதலைப்புலிகளிடம் இருந்து பாதுகாக்கின்ற நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றோம் என்றும் தற்பொழுது கருத்து கூறிவருவது நகைப்பிற்குரியது. சர்வதேச ரீதியாக 7 சர்வதேச பேச்சுவார்த்தைகளும் 14 உள்ளூர் பேச்சுவார்த்தைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரச தரப்பு மேற்கொண்டிருந்தது. இக்கட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை கைப்பற்றிவிடுவார்கள் என்ற நோக்கத்தோடு இந்தியா.சீனா.அமெரிக்கா விடுதலைப்புலிக்கான தனி நாடு என்பதனை எதிர்த்தமையினால் இடைக்கால நிர்வாகத்தை குழப்பி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் போராட்டத்தை அழித்தொழிக்க வேண்டும் என்பதை இம் மூன்று நாடுகளுடன் இணைந்து மொத்தமாக 38 நாடுகள் ஒருங்கிணைந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை முற்றுகைக்கு கொண்டுவந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. விடுதலைப்புலிகளின் போராளிகள் பலரைம் ஈவிரக்கம் இன்றி வெட்டியும் சுட்டும் கொன்ற காணொளிகள் ஆதரபூர்வமாக இருக்கின்றன. அந்த வகையில் பிரபாகரனின் குடும்பத்தை பலிவாங்க வேண்டும் என்ற இறுமாப்புடன் 12 வயதான பாலச்சந்திரனை பிஸ்கட்கொடுத்து சாப்பிடவைத்த பின் சுட்டுக்கொன்றது என்பது சர்வதேச ரீதியாக மனித உரிமை மீறலாகும். திட்டமிட்டு படுகொலை செய்தல் என்பது இனப்படுகொலையின் ஒரு அங்கமாக ஐக்கிய நாடுகள் சபை கூறுகின்றது. பாலச்சந்திரனின் இறப்பில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்களை அரசாங்கம் தெரிவித்திருந்தது. இதன் உண்மை நிலைப்பாட்டை அறியும் பொழுது 2009 மே 19 காலை 10 மணியுடன் இறுதிப்போர் முடிவுக்கு வந்து விட்டதாக இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார். அந்த நேரத்தில் அதுபற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் பாலச்சந்திரன் அதற்குப் பின்னரும் அதாவது 2009 மே 19ம் திகதி காலை 10.14 மணிக்குப் பின்னரும் உயிருடன் இருந்துள்ளதாக புதிய ஒளிப்பட ஆதாரம் கூறுகிறது. எனவே அந்த நேரத்தில் இருதரப்பு மோதலில் அவர் அகப்பட்டிருக்க வாய்ப்பில்லை. அப்படி இருதரப்பு மோதலில் அகப்பட்டு இறந்திருந்தால் கூட அவரது சடலத்தை அப்போதே இராணுவம் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இவை எதுவும் நடந்திருக்கவில்லை. சிறுவன் என்பதால் இரகசியமாக இந்த விவகாரத்தை மறைக்கும் முயற்சிகளே நடந்துள்ளதாகத் தெரிகிறது.

தொடரும்...

# வடபகுதி கடற்தொழிலின் சமகால நிலவரங்கள்

கடந்தவார தொடர்ச்சி...

வலிச்சல் வலை வழிந்து போனால் தான் மீன் படும். இடையிலை இந்த குற்றிகளில் வலை சிக்கினால் வலை வழியாது. இதனாலை மீன்படாது. வலை சேதமாகும். கண்டல் தாவரம் பாதுகாக்கப்பட்டது. அதனை வெட்ட கூடாது. ஆனால் அதை வெட்டிக்கொண்டு போகிறார்கள். தள்ளாடியிலை வெட்டி மன்னாருக்குள்ளால கொண்டு போகின்றார்கள். ஆற்று முகத்துவாரத்திலை கடற்படையினர் பரிசோதிப்பார்கள். அவருக்கு ரீலோட் கார்ட ஒன்று கொடுத்தால் அவர் அந்த நேரம் விட்டு விடுவார்.

இப்பொழுது புதிதாக ஒரு நுட்பம் அகலச்சிறகு வலை என்று ஒன்றை பயன்படுத்துகின்றார்கள். கம்புகளுக்குப் பதிலாக அன்ரனா குழாய்கள் போட்டிருக்கிறார்கள். பண்ணைப்பாலத்தால போகும் போது அவற்றைக் காணலாம். பெரிய கம்புக்கு பதிலாக ஒரு வலைக்கு 25 தொடக்கம் 30 அன்ரனா குழாய் கம்பிகளை நடுவாங்கள். அப்படி 100. 200 வலைகள் இருக்கின்றன. அப்படியென்றால் கரைக்கு மீன் எப்படி வரும். மன்னாரிலை நிறைய இடத்தில் இதனால் பிரச்சனை. இரவில் படகு ஓடினால் அந்த கம்பிகளாலை படகு எல்லாம் உடையுது. படுப்பு வலைகளை அந்த இடங்களில் போடேலாது. இப்பிடியான பிரச்சனைகளை சொன்னால் தீர்ப்பதற்கு ஒருவரும் இல்லை. அரசியல்வாதிகள் கூட இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மன்னாரிலை நடந்த தேர்தலில் நான்கு தொகுதியில் மூன்று தொகுதியில் ஐக்கிய தேசியக் கடசி வென்றது. இவை எல்லாம் மீனவர்களின் வாக்கு. இதனால் அவர்களை எட்டியும் பார்க்காமல். கூட்டமைப்பினர் பழிவாங்குகிறார்கள். இவர்கள் ஏதும் முறைப்பாடு சொன்னால் நாங்கள் வரமுடியாது நீங்களே பேசித்தீர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்கின்றார்கள்.

உற்பத்தி அளவு என்று பார்த்தால் எங்களுடைய பதிவின் படி அரசாங்கப் புள்ளிவிபரம் எல்லாம் பிழை. அவர்கள் கூட்டி காட்டுகின்றார்கள். புள்ளிகள் அப்படி இல்லை. எங்களுடைய ஊரில் கிட்டத்தட்ட 350 வள்ளம் நிற்கின்றது. கடலுக்கு போவது 10, 15 வள்ளம் தான். ஏனென்றால் அந்தளவிற்கு மீன் இல்லை. கறிக்கே மீன் இல்லை. மீனவர்கள் வள்ளத்தை இழுத்து வைத்திட்டு நிறையப் பேர் முல்லைத்தீவிலை கூலிக்கு அட்டை பிடிக்கிறதற்கு நிற்கிறார்கள். இதாலை அங்கே பிரச்சனை. எல்லோரையும் போகச்சொல்லி அவர்கள் துரத்துகிறார்கள். அங்கே அடிபாட்டில் காயங்கள் ஏற்பட்டுமிருக்கிறது. கிழக்கு கரையோரப்பகுதிகளில் ஆட்கள் இல்லாத இடம் இருக்கின்றது. அதில் பருவத்துக்கு ஒரு பொதுவான மீன்பிடி இடத்தை ஒதுக்கி வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களுக்கு ஒரு பருவகாலத்தில் அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுத்து குறிப்பிட்ட கால முடிய அவர்கள் திரும்ப போககூடியவாறு ஏற்பாடு செய்து கொடுத்தால் நல்லது என நாங்கள் கதைத்தோம். அதற்கு ஒருவரும் ஒத்து வரவில்லை. தென்பகுதி மீனவர்கள் வந்து அந்த இடத்தை பிடிப்பார்கள் அந்த நேரம் யோசிப்பீர்கள் என்று சொல்லியிருக்கின்றோம்.


மன்னாரிலை நிறையப்பேருக்கு தொழில் இல்லாமல் சரியான கஸ்டம். அவர்கள் இன்று அனுமதி பெற்ற முதலாளிகளுக்கு கூலிக்கு நின்றுதான் அட்டை பிடிச்சு கொடுக்கிறாங்கள். அவ்வாறு நிறைய பிரச்சனைகள் போகின்றது. அங்கு துறைசார்ந்த கல்வி இல்லை. பாடசாலைகளில் இது சம்பந்தமான பாடமே இல்லை. ஆனால் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மீன்பிடி தொழில் தொடர்பான பாடம் இருக்கின்றது. நாங்கள் விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் பல்கலைக்கழகத்தில் சொல்லி கடல்வளப்பயிற்சியை தொடங்கி அதில் படித்த மாணவர்களை வடமாகாணத்தில் அதற்கான ஆசியர்களாக நியமித்து பாடசாலைகளில் படிப்பித்தோம். நான் பரீட்சை தாள் திருத்த போனனான். கரையோர மாணவர்கள் நல்ல ஆர்வத்தோடு இந்தப் பாடத்தை கற்றிருக்கின்றார்கள். இன்று அந்த பாடமே இல்லை. படிப்பிற்கப்படுவதுமில்லை. ஆசிரியர்களும் அதற்கென்று இல்லை. அதில் பயிற்சி பெற்றவர்களும் கிடையாது. சரியான நிபுணத்துவ ஆலோசனை இல்லை. பல்கலைகழக மட்டத்தில் கூட அது குறைவுதான். கடல் தொழில் பீடம் என்ற ஒன்று வரப்போகின்றது. முல்லைத்தீவிலை அனுமதியெல்லாம் வந்துவிட்டது. அதற்கு யார் மாணவர்களாக இருக்கப் போகின்றார்கள் என்றால் சிங்கள் மாணவர்களாகத்தான் இருப்பார்கள். ஆங்கில மொழியில்தான் வரப்போகின்றது. எங்களுடைய சனம் கடல்தொழில் இழிவு தொழில். மீன் பிடியா என அதற்கு விண்ணப்பிக்க மாட்டார்கள். சிங்கள மாணவர்கள் விண்ணப்பிப்பார்கள். அவர்களுக்குத்தான் கிடைக்கும். இது எப்படி இயங்குமென்று எங்களுக்கு தெரியவில்லை. அப்படி ஆளணிகள் என்று சொல்லி எங்களுக்கு கிடையாது. வளத்திற்கு ஆளில்லை. பாதுகாப்பிற்கு இல்லை. அப்படியிருக்கும் போது எப்படி இந்த தொழிலை முன்னெடுத்து செய்கின்றது.

கடல் தொழில் வித்தியாசமானது விவசாயம் போன்றதில்லை. ஆளணிப் பிரச்சனை இருக்கின்றது. அரசாங்க கல்வி இல்லை. அடிக்கடி இடம்பெற்ற இடப்பெயர்வு. இந்திய மீனவர்களின் தொல்லை. எங்களுடைய ஆட்களின் ஒழுக்கயீனம் என பல பிரச்சனைகள். நிர்வாக அதிகாரிகள் ஓரளவுக்கு செயற்படுகின்றார்கள். ஆனால் பொலிஸ். இராணுவம் லஞ்சம் வாங்கிக் கொண்டு இரவில் பார்ட்டி போட அவர்கள் தாங்களுடைய தொழிலை செய்து கொண்டே இருக்கின்றார்கள். எந்தவிதமான பொறுப்பு ஏதும் கிடையாது. இதனால் தான் இன்று கஞ்சாக்கடத்தல் இடம்பெறுகின்றது. இதை யார் கட்டுப்படுத்துவது. இத்துறையில் இருக்கின்ற பிரச்சனைகளை பாராளுமன்றத்துக்கு செல்பவர்கள் கூட கதைப்பதாக தெரியவில்லை.

எங்களுடைய இடங்களுக்கு மாற்று கட்சிகள் ஊடுருவி எங்களுடைய வாக்குகளை இலகுவாக எடுத்துச் செல்கிறார்கள். ரிஷாத் வந்து எல்லா இடங்களிலும் முஸ்லீம்களுக்கு மின்சார வசதி. வீதி புனரமைப்பு. சின்ன வேலைகள் பெற்றுக்கொடுக்கின்றார். எந்தப்பிரச்சனை என்றாலும் அவரிட்டத்தான் போகவேண்டியிருக்கின்றது. முந்தியகாலத்தில் "எழுவோம் மீள உறுதி கொள்ளுவோம்" என்று நாலு வசனத்தைப் பேசிறது. இப்ப அதெல்லாம் சரிவராது. சில அரசியல் வாதிகள் வாக்கு வாங்கிட்டு போய் விடுவார்கள். பின்னர் எட்டிக்கூட பார்க்க மாட்டார்கள். சனம் தனக்கு தேவையென்றால் யாரிடம் போகும்? தன் தேவையை நிறைவெற்றுபவனிட்டதான் போகும். அவன் செய்து கொடுக்கின்றான். நாங்கள் யோசிக்கின்ற மாதிரி அவன் சிந்திக்கமாட்டான். அவன் இதை பயன்படுத்தி இலகுவாக உள்ளே புகுந்திடுறான். இதுதான் பிரச்சனை. ஆகவே நாங்கள் வேற மாதிரி யோசிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன. எங்களுடைய கடல்வளங்களை மீன்பிடிக்கு. சுற்றுலாப் பயணத்துறைக்கு வினைத்திறனுடன் எப்போது பயன்படுத்தப் போகின்றோம் நாம்?



# மகளிர் பக்கம்



## குதிகால் வெடிப்பை சரிசெய்வதற்கு சில டிப்ஸ்

பொதுவாக தோல் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளில் குதிக்கால் வெடிப்பும் ஒன்றாகும்.

இந்த குதிக்கால் வெடிப்பானது அதிகம் வறட்சியால் ஏற்படுகிறதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதனால் இளம்வயதிலே பாதங்களில் வெடிப்பு ஏற்படுகின்றது.

பாதங்களில் உள்ள வெடிப்புகள் அழகைக் கெடுப்பதுடன் வலியையும் உண்டாக்கும்.

இத்தகைய வலியைப் போக்கவும். வெடிப்பைப் போக்கவும் கருப்பு உப்பு சிறந்த தீர்வைத் தருகிறது. இதனை சரியான முறையில் பயன்படுத்தினால் எளிய முறையில் இதிலிருந்து விடுபட முடியும்.

தற்போது அவை எப்படி என்பதை பார்ப்போம்.

செய்முறை


ஒரு பக்கெட்டில் பாதி அளவு தண்ணீர் நிரப்பிக் கொள்ளவும்.

அதில் சிறிதளவு கருப்பு உப்பு சேர்த்துக் கொள்ளவும். பக்கெட் நீரில் உங்கள் பாதங்களை வைக்கவும். 15-20 நிமிடங்கள் அப்படியே வைத்திருக்கவும்.

மென்மையாக பாதங்களை ஸ்க்ரப் செய்யவும். தொடர்ந்து இப்படி செய்து வருவதால் பாத வெடிப்பின் காரணமாக உண்டாகும் எரிச்சல் மற்றும் அரிப்பு நிவாரணம் பெறுவதை உங்களால் உணர முடியும்.

மேலும், கருப்பு உப்பு உங்கள் பாதங்களைச் சுற்றியுள்ள இறந்த அணுக்களைப் போக்கி பாதங்களை மென்மையாக்கும்.






## கருமையான உதட்டினை சிவப்பாக மாற்றுவதற்கான டிப்ஸ்!

பெண்களின் அழகை மெருகேற்றுவதில் உதடுகளும் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது.

என்ன தான் உதட்டிற்கு செயற்கை அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்தினாலும் இயற்கையாகவே உங்க உதடுகள் சிவப்பு நிறத்தில் பட்டு போன்று மென்மையாக காணப்பட்டால் எப்படி இருக்கும்.

ஆனால் நிறைய பேருக்கு சிவப்பு நிற உதடுகள் அமைவதில்லை. பலருக்கு கருப்பாகவே காணப்படும். இவற்றை ஒரு சில இயற்கை முறைகள் மூலம் சரி செய்யலாம்.

தற்போது கருப்பாக அசிங்கமாக இருக்கும் உதடுகளை எப்படி அழகுப்படுத்தலாம் என்பதை இங்கே பார்ப்போம்.

சிறிது எலுமிச்சை சாற்றை உங்கள் உதடுகளில் தடவி, சுமார் 15 நிமிடங்கள் விட்டு, தண்ணீரில் கழுவவும். சிறந்த முடிவுகளை பெற தினமும் இதைச் செய்து வரலாம்.

சிறிது சர்க்கரையை ஆலிவ் எண்ணெய் அல்லது தேனுடன் கலந்து ஸ்க்ரப் செய்யவும். இதை உங்கள் உதடுகளில் சில நிமிடங்கள் மெதுவாக மசாஜ் செய்து பின் கழுவ வேண்டும். இது உங்கள் உதடுகளை உரிக்கவும், கருமையை ஏற்படுத்தும் இறந்த சரும செல்களை அகற்றவும் உதவும்.

படுக்கைக்குச் செல்வதற்கு முன் சிறிது பீட்ரூட் சாற்றை உதடுகளில் தடவி, இரவு முழுவதும் அப்படியே விட்டு விடுங்கள். காலையில் உங்கள் உதட்டை கழுவி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

ஒரு வெள்ளரிக்காயை துண்டுகளாக நறுக்கி, உதடுகளில் சில நிமிடங்கள் தேய்க்கவும். சுமார் 10 நிமிடங்கள் அப்படியே விட்டுவிட்டு தண்ணீரில் கழுவி வந்தால் நல்லது.

படுக்கைக்குச் செல்வதற்கு முன் சிறிது பாதாம் எண்ணெயை உதடுகளில் தடவி இரவு முழுவதும் அப்படியே விட்டுவிடவும். மறுநாள் காலையில் கழுவ வேண்டும்.



## தொப்பையை குறைக்க எளிதான ஆசனம்

பொதுவாக யோகசானத்தில் பல ஆசனங்கள் தொப்பையை குறைக்க உதவுகின்றது. இதில் வக்ராசனம் பெரிதும் உதவுகின்றது. தற்போது இதனை எப்படி செய்யலாம் என்பதை என்ன நன்மைகள் கிடைக்கும் என்று பார்ப்போம்.

செய்முறை

விரிப்பில் கால்களை நீட்டி அமர்ந்துக் கொள்ளவும். நேராக நிமிர்ந்து வலது காலை மடக்கி பாதத்தை இடது மூட்டுக்கு அருகில் வைக்கவும். வலது கையை முதுகுக்குப் பின்னால் தரையில் ஊன்றியபடி வைத்துக் கொள்ளவும். வலது கையை இடப் பக்கம் தள்ளி ஊன்றி, பின் இடது கையை உயர்த்தி வலது கால் கட்டை விரலை அல்லது கணுக்காலையோ பிடித்துக்கொள்ளவும். இடுப்பை வலது பக்கம் திருப்பி தோளையும், தலையையும் திருப்பிக் கொள்ளவும். சீரான மூச்சுடன் அதே நிலையில் சிறிது நேரம் இருக்கவும். மெதுவாக நேராகத் திரும்பி இடது கையைக் காலில் இருந்து விடுவித்து மேலே உயர்த்திய பின் கீழே இறக்கவும். வலது கையை பின்னாலிருந்து நேராகக் கொண்டுவரவும். காலை நீட்டிக் கொள்ளவும். இதேபோல், இடது புறம் செய்யவும். இரு பக்கமும் 3 முறை செய்தல் சிறப்பு.

பலன்கள்

தொப்பை குறையும்.
சர்க்கரை நோய் கட்டுக்குள் இருக்கும்.
குண்டாக இருப்பவர்கள் மெலிய உதவும்.
முதுகு, இடுப்பு, கழுத்து பிரச்சனைகள் எதுவும் வராமல் பார்த்துக்கொள்ள முடியும்.
கண் பார்வை அதிகரிக்கிறது.

எச்சரிக்கை

முதுகு நேராக இருக்க வேண்டும். முன்னால் குனியவோ பின்னால் வளையவோ கூடாது.





## வெயில் மூலம் கை,கால்களில் ஏற்படும் கருமையை நீக்குவதற்கு!

பலருக்கு முகம் ஒரு நிறமும், கைகள் மற்றும் கால்கள் வேறு நிறமும் போன்று காட்சியளிக்கும்.

அதிலும் வெயில் மற்றும் சுற்றுப்புற மாசு காரணமாக அதிக பாதிக்கப்படும் உடல் பாகத்தில் முக்கியமானவை நம் பாதங்கள் இதனால் பலர் மன உளைச்சலுக்கு ஆளாக்குகின்றனர்.

இந்த கருமையை போக்க, பெண்கள் விலையுயர்ந்த கிரீம்களைப் பயன்படுத்துகிறார்கள், ஆனால் வீட்டு வைத்தியம் மூலம், செலவில்லாமல் கை, பாதங்களின் பளபளப்பை மீட்க முடியும்.

தற்போது அவற்றை இங்கே பார்ப்போம்.

ஒரு வாளியில் வெதுவெதுப்பான நீரை ஊற்றி அதில் ஒரு ஸ்பூன் சிகைக்காய் பவுடர், 200 மில்லி பால் மற்றும் ஒரு கைப்பிடி ரோஜா இதழ்களைச் சேர்த்து கால்களை 15 முதல் 20 நிமிடம் வரை ஊற வைக்கவும். பால் சருமத்தை மிருதுவாக்கி இயற்கையாக கருமையை போக்குகிறது.

2 ஸ்பூன் திரிபலா சூரணம், மஞ்சள், கடலை மாவு ஆகியவற்றை ரோஸ் வாட்டருடன் கலந்து போன்ற பதத்தில் கருமை நிறமுள்ள கால் பகுதிகளில் தடவவும். 15 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரை வைத்து ஒரு காட்டன் துணியில் துடைத்து எடுக்கவும். இதை செய்வதன் மூலம் பளிச் என்ற அழகிய கால்களை பெறலாம்.

படுக்க செல்வதற்கு முன் இதனை கால்களில் தடவி, கால்களுக்கு லேசான மசாஜ் செய்வது மூலம், கால்களுக்கு நல்ல ரிலாக்ஸ் கிடைப்பது மட்டுமல்லாமல், கால்களில் உள்ள கருமையை போக்கும்.

1 ஸ்பூன் ஆரஞ்சு தோல் பேஸ்டுடன் ஒரு ஸ்பூன் கடல் உப்பை சேர்த்து அதனுடன் தேங்காய் எண்ணெய் கலந்து கால்களின் சருமத்தில் ஸ்க்ரப் செய்யவும். இந்த வழிமுறை இறந்த சரும செல்களை அகற்ற உதவுகிறது.மேலும், இது சருமத்தை பிரகாசமாகவும், தெளிவாகவும் மாற்றுகிறது.

ஒரு கப் பழுத்த பப்பாளியுடன் ஒரு ஸ்பூன் தேன் கலந்து இரு கால்களிலும் தடவி நன்கு மசாஜ் செய்யவும். 10 நிமிடங்கள் கழித்து சுத்தமான நீரில் கால்களை கழுவவும். வாரத்திற்கு ஒரு முறை இந்த வழிமுறையை செய்துவந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

ஒரு கப் வாழைப்பழ துண்டுகளுடன் ஒரு ஸ்பூன் தேன் மற்றும் ஒரு ஸ்பூன் பால் அல்லது பால் ஏடு சேர்த்து பிசைந்து கொள்ளவும். அந்த பேஸ்டை கால்களில் தடவி 15 நிமிடங்கள் கழித்து துடைத்து எடுத்து வெதுவெதுப்பான நீரில் கழுவவும்.

# டொலரின் வீழ்ச்சியும் சாதக,பாதக தன்மைகளும்



## ஊடறுப்பு

கலாநிதி கணேசமூர்த்தி

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : நீங்கள் குறிப்பிடுகின்ற இந்த காரணிகளோடு இலங்கை கடன் செலுத்துவதை முழுமையாக நிறுத்தியிருக்கின்றது. கடன் எந்தவொரு நாட்டிற்கும் வழங்கியவர்கள் அத்தனைபேரும் மீள தாருங்கள் என்று கேட்கும் பொழுது அதற்கான ஒழுங்கான பதிலை இலங்கை அரசாங்கம் வழங்கவில்லை. டீ போல்ட் என்ற நிலையில் நாடு நிற்கின்றது ஆனால் டொலரில் நாங்கள் முன்னேறிவிட்டோம் என்று கூறுகின்றது. ஒட்டுமொத்தத்தில் எல்லாமே சரிவடைந்த நிலையில் இருக்கும் பொழுது இவர்கள் டொலரை நாங்கள் கட்டுப்படுத்திவிட்டோம் டொலருக்கு நிகராக பெறுமதி கூடுகின்றது என்று கூறும் பொழுது இவற்றை இவர்களால் தொடர்ச்சியாக தாக்குப்பிடிக்கக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றதா அல்லது வெளித்தோற்றப்பாடான கருத்தாக எடுத்துக்கொள்ளமுடியுமா?**

பதில் : இதில் இருக்கின்ற மிக முக்கியமான விடயம் என்னவென்றால் பொருளாதார துறையில் ஆய்வு போன்றவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள் கூட இதனுடைய அடிப்படைகளை சரியாக புரிந்துகொண்டார்களோ எனக்கு தெரியவில்லை. இப்பொழுது இருக்கின்ற இந்த டொலர் உட்பாய்ச்சல்களை தொடர்ந்து தக்கவைக்க முடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் இருப்பது போல் தெரிகின்றது. இது சில நேரங்களில் அரசியல் ரீதியாக ஊக்கமளிப்பதாக கூட இருக்கலாம். எனவே தற்பொழுது வெற்றி என்ற ஒரு விடயம் பொருளாதாரத்தை நாங்கள் ஓரளவிற்கு சரிவில் இருந்து மீட்டுவிட்டோம் என்றவாறான ஒரு தோற்றப்பாடு அரசியல் ரீதியாக தேவைப்படுகின்றது என்பது நமக்குத் தெரியும். எனவே அந்த அடிப்படையிலே வைத்துக்கொண்டு பார்க்கின்ற பொழுது தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமையை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதற்காக மேலும் செயற்கையான சில வேலைகளை கையாளுவதற்கு முயற்சிக்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் நீண்டகால அடிப்படையிலே இது தாக்குப்பிடிக்கக்கூடிய நிலைமை அல்ல.

**கேள்வி : நீண்டகால அடிப்படையில் என்று நீங்கள் கூறுவதை இவ்வாறு எடுத்துக்கொள்ளமுடியுமா இதை ஒரு பாணியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவும் மேற்கொண்டிருந்தார் தன்னுடைய வருகையின் பின் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது ரூபாவின் பெறுமதி அதிகரிக்கின்றது டொலரில் வீழ்ச்சி ஏற்படுகின்றது கோட்டபாய ராஜபக்சவின் பொருளாதார கொள்கை திடமாக வகுத்துவிட்டார் என்று அதே தவரை ரணில் விக்ரமசிங்க செய்கின்றாரா? அல்லது செய்ய ஆரம்பித்துவிட்டாரா? அல்லது இதனுடைய பெறுமதி என்னவாக இருக்கும்?**

பதில் : கோட்டபாய ராஜபக்சவை போல அல்ல இந்த ஜனாதிபதியினுடைய நிலைமை. அவருக்கு மேற்குலகினுடைய ஒரு பின்புலம் நிச்சயமாக இருக்கவில்லை என்பது எமக்கு தெரியும். ஆனால் இவரை பொருத்தவரையிலே மேற்குலகினுடைய ஒரு உதவி அது நிதி ரீதியான உதவியாக இருக்கலாம் அல்லது அரசியல் ரீதியான கொள்கையால் ஒத்துக்கொண்டமையாகல் ஏற்பட்ட உதவியாக இருக்கலாம். எனவே அந்த ஒரு பின்புலம் இவருக்கு இருக்கும் நிலை உள்ளது. ஆனால் அது மட்டுமே இலங்கையின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தவோ இலங்கை ரூபாயின் பெறுமதியை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதற்கோ போதுமானதாக இருக்காது. எனவே என்னை பொறுத்தவரையில் இந்த நிலைப்பாடு அதாவது சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பொழுது இதனை சில பொருளியலாளர்கள் இலங்கையில் இருக்கின்றவர்கள் கூட மத்திய வங்கியின் ஆளுனரும் ஜனாதிபதியும் சேர்ந்து எடுத்த நடவடிக்கைகள் காரணமாக பொருளாதாரம் நிலைபெற ஆரம்பித்திருக்கின்றது என்ற தோற்றப்பாட்டை உருவாக்குவதற்கு வலிந்து முயற்சி செய்கின்றார்கள். அவ்வாறு முயற்சி செய்வது தவறு என்று நான் கூறமாட்டேன் ஏனென்றால் அவர்களுக்கு அது தேவைப்படுகின்றது. ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமையை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வது மிக கடினம் என்றே நான் கூறவிரும்புகின்றேன்.

அதைத்தான் நான் கூறினேனே தவிர இலங்கை ரூபாயின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடையப்போகின்றது என்றோ அல்லது அதிகரிக்கப்போகின்றது என்பதோ இனிமேல் எடுக்கப்படுகின்ற பொருளாதார நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தான் நாங்கள் கூறமுடியும். ஆனால் தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமை நல்ல நிலைமை என்று நாம் கருதும் இந்த சூழல் பொருளாதாரத்தை சுருங்க வைத்து அதன் காரணமாக ஒரு மிகையை காட்டி நாம் பொருளாதாரத்திலே முன்னேறிவிட்டோம் இலங்கை ரூபாய் தாக்குப்பிடிக்குமளவிற்கு முன்னேற்றமடைந்து வருகின்றது என்ற தோற்றப்பாட்டை காட்ட முயற்சிப்பது பொருளாதார ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமைஅல்ல. பொருளாதார நடடிவக்கைகள் வரிவடைய வேண்டும் அதன் காரணமாக உற்பத்திகள் பெருக வேண்டும் ஏற்றுமதிகள் அதிகரிக்க வேண்டும் வெளிநாட்டு முதலீடுகள் உள்வரவேண்டும் இவை ஏற்படுவதன் மூலம் குறித்த நாட்டுக்குள் வருகின்ற டொலர்களின் அளவு அதிகரித்து அதன் மூலமாக இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் பொழுது தான் நிலைபேறு விதத்திலே இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பதாக கொள்ளலாம். இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நிலைமை மிகமிக தற்காலிகமானது என்றே நான் கருதுகின்றேன்.

**கேள்வி : நீங்கள் தற்பொழுது கூறிய அத்தனை விடயங்களோடும் ரூபாயின் பெறுமதி அதிகரிக்கின்றது டொலரின் பெறுமதி வீழ்ச்சி அடைகின்றது என்பது தான் இருக்கும் சூழல் இதில் பிரதானமாக வெளிநாட்டு பணங்கள் வருகின்ற மூலங்கள் இருக்கின்றது குறிப்பாக ஆசிய பிராந்தியத்தில் இருக்கின்ற அரபு நாடுகளில் இருந்து கணிசமான பணங்கள் இலங்கைக்குள் வந்துகொண்டிருக்கின்றன. அதே போன்று மேற்கத்தேய நாடுகளில் இருந்தும் அதிகளவான பணங்கள் அங்கே இருக்கும் இலங்கையர்களினால் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை எப்படியான முறைகளில் வருகின்றன என்பதனை தாண்டி பணங்கள் வருகின்றன. இந்தவொரு இறுக்கமான பணகொள்கையினுடைய முடிவு பண வரவினை கட்டுப்படுத்துமான அல்லது அவர்கள் அனுப்புவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவார்களா?**

பதில் : இப்போதைய சூழலில் டொலரை நாட்டுக்குள் கொண்டு வருகின்ற பொழுது அதற்கான தடைகள் இல்லை அரசாங்கம் டொலர் உள்வருகையினை ஊக்குவிக்கின்றது. அந்த ஊக்குவிப்பிற்கு ஒரு காரணம் இலங்கைக்குள் அதிகளவில் டொலர்கள் உள்ளே வருவதற்கு முக்கிய காரணமாக நான் பார்ப்பது சந்தைக் காரணங்கள் தான். ஏனென்றால் 360. 370 என்ற அளவில் டொலர் இருக்கும் பொழுது குறைவான டொலர்களை அவர்கள் இலங்கைக்குள் கொண்டுவந்து அதிகளவான ரூபாய்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதனாலேயே முன்னரை விட கூடுதலான உட்பாய்ச்சல்கள் மத்திய கிழக்கில் இருந்தும் ஏனைய நாடுகளில் இருந்தும் இலங்கைக்குள் வந்தன. அது சிறந்தவொரு உத்தியாக கையாண்டிருக்கின்றார்கள். அதே போன்று முறைசாராத துறைகள் ஊடாக நாட்டுக்குள்ளே பணம் கொண்டுவருவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் கடந்த காலங்களில் எடுக்கப்பட்டதும் எமக்கு தெரியும் அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கின்றார்கள்.

எனவே தான் இந்த உட்பாய்ச்சல்கள் இலங்கை நாட்டுக்குள்ளே வந்திருக்கின்றன. அவ்வாறு இல்லாமல் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நிலைமை காரணமாக இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துக்கொண்டு செல்லுகின்றபொழுது இவ்வாறு ஊகவணிக அடிப்படையிலே அதிகளவு டொலர்களை இலங்கைக்குள்ளே கொண்டுவருகின்ற நடவடிக்கைகளிலே ஒரு தொய்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஏனென்றால் இலங்கைக்குள்ளே டொலரை கொண்டுவந்து அதன் மூலம் கிடைக்கும் ரூபாய்களின் அளவு குறைவாக இருக்குமாக இருந்தால் அது உள்ளே வருகின்ற உழைத்து அனுப்புகின்ற நிலையிலே ஒரு தொய்வு நிலையை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் இருக்கின்றது. ஆனால் அதே வேளையிலே இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் பொழுது ஏற்றுமதிகளின் விலைகளும் வெளிநாடுகளிலே அதிகரிக்கும். எனவே ஏற்றுமதிகளை செய்வதிலும் கூட சில சிக்கல்கள் வரக்கூடும் ஏற்கனவே இலங்கையில் விலை மட்டங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலே இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்போகின்ற அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உண்டு. இந்த மாதிரியான சில விளைவுகள் ஏற்படக்கூடிய நிலைமைகள் இருப்பதனால் எதிர்காலத்தில் இலங்கைக்குள் வரவிருக்கும் டொலர்களின் உட்பாய்ச்சலிலே சிறிய தொய்வு நிலை ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

**கேள்வி : நீங்கள் தற்பொழுது ஏற்றுமதி தொடர்பில் குறிப்பிட்டீர்கள். இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய அதிகளவான பொருட்கள் இலங்கையில் உள்ள மரக்கறிகளாக இருக்கலாம் அல்லது மீன் போன்ற பல்வேறுபட்ட பொருட்கள் இன்று குறிப்பாக அதிகளவில் மேற்கத்தேய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அது தொடர்பில் சற்று விரிவாக கூறுங்கள். இலங்கையின் ரூபாயின் பெறுமதி அதிகரித்து டொலரின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ள சூழ்நிலையில் ஏற்றுமதி செய்யப்பட்டுகின்ற பொருட்களினுடைய பெறுமதி வெளிநாடுகளில் திடீர் அதிகரிப்பிற்கு வாய்ப்பிருக்கின்றதா?**

பதில் : தற்பொழுது ஒரு டொலரை கொடுத்து நீங்கள் முன்னர் 370 ரூபாய் பெறுமதியான பொருளை வாங்கினீர்களாக இருந்தால் இப்பொழுது இலங்கையில் இருந்து 335 ரூபாய் பெறுமதியான பொருளை வாங்கலாம். அப்படியென்றால் ஒரு டொலரை கொடுத்து இலங்கையிலுள்ள பொருளை வாங்கக்கூடிய பொருளின் விலை அதிகரித்திருக்கின்றது என்பது தான் அர்த்தம். எனவே இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யக்கூடிய பொருட்களின் விலைகள் அதிகரிப்பதாக ஒரு முடிவை எடுத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே இலங்கையிலிருந்து வருகின்ற பொருட்களின் விலைகள் வெளிநாடுகளிலே அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்க்கின்றபொழுது இலங்கையின் போட்டித் தன்மையிலே சில பிரச்சனைகள் எழுக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் இதை முன்னர் ஆரம்பத்தில் இருந்த நிலைமைகளுடன் ஒப்பிட்டு பார்க்கின்ற பொழுது இந்த நிலைமை 230 ரூபாய் ஒரு டொலர் என்ற அடிப்படையில் பார்க்கின்ற பொழுது திடீரென 370 ரூபாய் என போகும் பொழுது இலங்கையினுடைய பொருட்கள் மிக மலிவானதாக வெளிநாடுகளிலே மாறின அந்த மலிவு நிலை தற்பொழுது குறைவடைந்துகொண்டு போகின்றது. அப்படியில்லாமல் இலங்கையினுடைய பொருட்களின் விலைகள் திடீரென ஒரு அதிகரிப்பை கண்டதாக நாங்கள் எடுத்துக்கொள்ளமுடியாது ஏனென்றால் முன்னர் இருந்ததைவிட இலங்கை பொருட்கள் டொலரினது பெறுமதி அதிகரித்ததை தொடர்ந்து இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை வெளிநாடுகளில் சடுதியாக மலிவானதாக மாறின.

**கேள்வி:நீங்கள்கூறுகின்றவிடயங்களோடுசற்று முரண்பட்ட கருத்து இருக்கின்றது வெளிநாட்டில் இருக்கின்ற வணிகர்கள் கூறுகின்ற ஒரு கருத்தாக இருப்பது என்னவென்றால் இலங்கை பொருட்களின் விலைகள் வழமைக்கு மாறாக அதிகரித்துவிட்டன எனவே நாங்களும் இந்த பொருட்களை அதிகளவில் தான் விற்க வேண்டும் அங்கு அதிகளவான பணத்தை கொடுத்தே நாங்கள் முதலீடு செய்கின்றோம் ஆனால் நீங்கள் கூறுகின்றீர்கள் இனிதான் அதிகரிக்கப்போகின்றது என்று. ஆனால் புலம்பெயர்ந்த தேசங்களான இங்கு அதிகரித்துவிட்டனவே இலங்கையினுடைய பொருளாதார சூழ்நிலையை காரணம் காட்டி. அதிகரிக்கப்பட்ட அந்த காலப்பகுதியில் குறைத்திருக்க வேண்டும் என்று ஆனால் நீங்கள் கூறுகின்ற விடயம் இங்கு முரணாக இருக்கின்றதல்லவா?**

பதில் : ஆமாம் நான் கூறியது நாணய மாற்று வீதத்தில் ஏற்பட்ட கருத்தை மட்டும் வைத்துக்கொண்டு தான் நான் கூறினேன். ஆனால் அதே வேளையிலே இலங்கையினுடைய பணவீக்கமானது 60 - 70 சதவீதம் பொதுவான பணவீக்கம் அதிகரித்திருக்கின்றது. எனவே விலை மட்டம் இலங்கையிலே அதிகரித்தது என்பது உண்மை ஒருபக்கம் இலங்கையினுடைய ரூபாய் பெறுமதி தொடர்ந்து குறைவடைந்துகொண்டு போகின்ற நிலைமை இருந்தாலும் கூட அதனை ஈடு செய்கின்ற அளவிற்கு இலங்கையினுடைய விலைமட்டங்கள் அதிகரித்து சென்றன. எனவே தான் நீங்கள் சொல்லும் அந்த விடயம் வெளிநாடுகளிலே இலங்கையினுடைய பொருட்கள் விலை அதிகரிப்பதற்கான ஒரு காரணமாக அமைந்தது.

இதில் இரண்டு விடயங்களை நாங்கள் பார்க்க வேண்டும் ஒன்று நாணய மாற்று வீதத்தில் ஏற்பட்ட மாற்றத்தை பார்க்க வேண்டும். இரண்டாவதாக உள்நாட்டில் ஏற்பட்ட பணவீக்கம் தொடர்பான நிலைமைகளை பார்க்க வேண்டும் எனவே தான் உள்நாட்டில் பணவீக்கம் அதிகரித்துக்கொண்டு போகின்ற பொழுது இலங்கை பொருட்களுக்கான விலைகள் சடுதியாக அதிகரிக்கின்றபொழுது அந்த விலை அதிகரிப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு தான் பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டிவரும். எனவே இலங்கை ரூபாயின் பெறுமதி ஏற்றம் என்பது இலங்கை பொருட்கள் வெளிநாடுகளிலே இன்னும் விலை அதிகரிப்பதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தும். ஆனால் தற்பொழுது மறுதலையாக பணவீக்கம் இலங்கையிலே குறைவடைந்துகொண்டு செல்கின்றது. இரண்டு எதிர் எதிர் திசையிலே அசைகின்ற காரணிகள் ஓரளவிற்கு இந்த இலங்கையில் இருந்து இறக்குமதி செய்கின்ற பொருட்களின் விலைகள் பாரியளவில் மாற்றமடைவதை தடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

# 13வது திருத்தச்சட்டமும், உள்ளூராட்சிமன்ற தேர்தலும்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

**கேள்வி : 13 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் அதை அமுல்படுத்த வேண்டும் என்று பல தமிழ்தரப்பு கூறிக்கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் இன்று உள்ளூராட்சிமன்ற தேர்தலும் இனி இல்லை என்ற முடிவிற்கு வந்திருப்பதாக அண்மைய செய்திகள் அறிவித்திருக்கின்றன. இந்த வகையிலே குறைந்தபட்சம் 13 ஐ ஆவது அமுல்படுத்துவதில் ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகின்றது ஏன் இந்த மாகாணசபைத் தேர்தலை முடிவடைந்தும் வைக்கவில்லை என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது இது தொடர்பில் நீங்கள் என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

பதில் : உண்மையில் மாகாணசபைத் தேர்தல் அதவது 13 வது அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டதே வடகிழக்கில் பிறையோடிப்போயிருந்த இனப்பிரச்சனைக்கான தற்காலிக ஒரு தீர்வாகத் தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதும் அதற்கு பின்னர் இந்த 13 வது அரசியல் அமைப்பு நவம்பர் மாதம் 1987 பாராளுமன்றத்திலே அது நிறைவேற்றப்பட்டதும். அது நிறைவேற்றப்பட்டு மூன்று நாட்களின் பின்னர் தான் வடகிழக்கு இணைந்த மாகாணசபைத் தேர்தலும் இடம்பெற்றது. உண்மையில் இந்த 13 வது அரசியல் அமைப்பிலே கூறப்பட்ட விடயங்களிலே மிக முக்கியமாக இந்த காணி அதிகாரம் மாகாணசபைக்கான பாதுகாப்பு பொலிஸ் அதிகாரங்கள் போன்ற விடயங்கள் உள்ளடங்களாக பல விடயங்கள் அதிலே மாகாணசபை அதிகாரத்திலே சேர்க்கப்பட்டாலும் கூட வடகிழக்கு மாகாணசபையிலே முதலாவது தேர்தல் இடம்பெற்றபொழுது வரதராஜாப் பெருமாள் அவர்கள் இதில் ஒன்றுமே இல்லை என்பதனை சுட்டிக்காட்டிருந்தார். அதற்கு முன்னரே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அதனை முற்றாக புறக்கணித்திருந்தார்கள். இதிலே இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலே எந்தவொரு அதிகாரப் பகிர்வும் இல்லை என்பதனை கூறியிருந்தார்கள் அதைத்தான் அப்பொழுது நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பாக முன்பிருந்த இலங்கை தமிழர் விடுதலை கூட்டணியும் அதை நிராகரித்திருந்தது அந்த தேர்தலை ரெலோவும் அந்த தேர்தலை நிராகரித்திருந்தது. முதலாவது தேர்தலில் ரெலோவும் போட்டியிடவில்லை இலங்கை தமிழர் விடுதலை கூட்டணி போட்டியிடவில்லை அவ்வாறானதொரு தேர்தல் இடம்பெற்றாலும் கூட அதிலே எல்லா அதிகாரங்களும் இருக்கின்றது என கூறிய ஈ.பி.ஆர்.எல்.எப் வரதராஜப்பெருமாள் தலைவராக இருந்தால் அதில் அதிகாரப் பகிர்வும் இருக்கின்றது என்று தான் அவர் தேர்தலிலே போட்டியிட்டிருந்தார். அவரை வெற்றிபெற வைத்ததும் இந்திய அமைதிகாக்கும் படையினர் தான் அந்த தேர்தலிலே பல கள்ள வாக்குகளை போடுவதற்கு மக்களை தூண்டி ஈ.பி.ஆர்.எல்.எப் அதிலே ஆட்சி அமைத்தது ஈ.என்.பி கட்சி அதில் எதிர்க்கட்சியாக இருந்தது எல்லாமே வரலாறு.

ஆனால் அதில் பார்க்க வேண்டிய விடயம் என்னவென்றால் அதே வரதராஜபெருமாள் அவர்கள் வடகிழக்கிணைந்த மாகாணசபையிலே இருந்த காலத்தை நாங்கள் பார்ப்போமாக இருந்தால் ஒரு வருடமும் ஏறக்குறைய ஏழு மாதங்களும் 29 நாட்களுமாக இருக்கும். இந்த குறுகிய காலத்திலே இதிலே ஒன்றுமேயில்லை என தமிழீனத்தை பிரகடனப்படுத்திவிட்டே அவர் சென்றார். அப்போதைய நிலையில் இந்தியாவிற்கு போனவர் தான் வரதராஜபெருமாள் அதன் பின்னர் அன்றிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையும் இணைந்த வடகிழக்கிற்கு தான் அதிகார பகிர்வு இல்லாவிட்டாலும் கூட நிதி ஒதுக்கீடுகள் அனைத்துமே 2006 ஆம் ஆண்டு வரையும் இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் ஏறக்குறைய 18 வருடங்களாக அந்த நிதியை ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் அதில் நடந்த விடயம் என்னவென்றால் 2006 ஆம் ஆண்டு தான் வடகிழக்கிலே இருக்கின்றதை பிரிக்க வேண்டும் என்று ஜே.வி.பி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இணைந்த வடகிழக்கை இரண்டாக பிரிப்பதற்காக நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த தீர்ப்பின் நிமித்தமாகத் தான் 2008 இல் முதன்முதலில் கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்றிருக்கின்றது.

ஆகவே தேர்தல் 2008 இல் இடம்பெற்றிருக்கின்றது கிழக்கு மாகாணசபைத் தேர்தல் இரண்டாம் கட்டமாக 2012 இல் இடம்பெற்றிருக்கின்றது வடமாகாணசபைத் தேர்தல் ஒரே ஒரு முறை 2013 ஆம் ஆண்டு வரை இடம்பெற்றிருக்கின்றது. தற்பொழுது அனைத்தும் கலைக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபை 2018ஆம் ஆண்டு மாகாணசபை கலைக்கப்பட்டும் கூட இந்த 9 மாகாணசபைகளும் பேரளவில் இயங்கவில்லை. தற்பொழுது 5 வருடங்களாக பிறையோடிப்போயிருக்கின்ற விடயத்தில் கூட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட இந்திய அரசாங்கம் அந்த தேர்தலை நடத்துங்கள் என்று கூட இதுவரை ஒரு அழுத்தத்தை கொடுக்கமுடியாத ஒரு நிலையில் தான் இந்திய அரசாங்கம் இருந்து கொண்டிருக்கின்றது.


ஆனல் இந்த 13 ஆம் அரசியலமைப்பு யாப்பிலே கூறப்பட்ட பல விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றவொரு விடயம் இருக்கின்றது. இதில் ஒன்றுமே இல்லை 13 வது அரசியலமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ் தேசிய கட்சிகளிலே சில கட்சிகள் எதிர்க்கின்றார்கள். சில தமிழ் கட்சிகளல் அதில் பல விடயங்கள் இருக்கின்றன அதை ஏற்கவேண்டும் என்று கூறுகின்றார்கள். இன்னும் சிலர் அடிப்படையாக இருக்கின்ற இந்த விடயத்தை நாங்கள் வைத்துக்கொண்டு அடுத்தகட்டத்திற்கு போகின்ற பல விடயங்கள் இப்படி அதிலே கூறப்பட்டிருந்தாலும் கூட முதலாவதாக 2012 ஆம் ஆண்டு மாகாணசபை சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட்டு அடுத்த தேர்தலை நடத்துவதற்காக அதிலே சில சரத்துக்களை அதில் இல்லாமல் செய்ததன் காரணமாக அது இழுபறியிலே இருந்தகொண்டிருக்கின்றது. ஆனால் நிச்சயமாக நல்லாட்சி அரசாங்கத்திலே தற்பொழுது இருக்கின்ற ரணில் அவர்கள் ஏற்கனவே இருந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள் அந்த தேர்தலை நடத்துவதற்கான பல வாய்ப்புக்களை சட்டத்தின் திருத்தத்தில் கொண்டுவந்து செய்யக்கூடிய முறை இருந்தது. அதைக்கூட செய்யவில்லை. அதையெல்லாம் கிடப்பில் போட்டுவிட்டு இப்பொழுது மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற விடயத்தை கொண்டு வருகின்றார்கள் நிச்சயமாக என்னைப்பொறுத்தவரையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை பொறுத்தவரையில் அல்லது இலங்கை தமிழரசுக் கட்சியை பொறுத்தவரையில் அடிப்படையாக இருக்கின்ற இந்த விடயத்தில் இருந்து அடுத்த கட்டத்தை நகர்த்துவதற்கு மாகாணசபைத் தேர்தல் பூரணமான அதிகாரங்கள் வழங்கப்பட்டு தேர்தலை நடத்துவது என்பதை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால் இதுதான் வடக்கு கிழக்கு மக்களுக்கான நிரந்தர தீர்வு என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் சுயநிர்ணய உரிமையுடன் வடக்கு கிழக்கிணைந்த தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஒரு தீர்வைத்தான் நாங்கள் கொண்டுவர இருக்கின்றோம். அதற்கு அடிப்படையாக தற்பொழுது இதை செய்ய வேண்டிய நிலையில் இலங்கை அரசாங்கம் இருந்துகொண்டு தேர்தலை இழுத்துச்செய்வது காணாமல் ஆக்கப்பட்டோர் சிலரைப் போன்று மாகாணசபை தேர்தல்களும் காணாமல் ஆக்கப்பட்டது என்று தான் நான் நினைக்கின்றேன்.

**கேள்வி : அரசாங்கம் உள்ளூராட்சிமன்ற தேர்தலையும் கைவிட்டிருக்கும் நிலையாகத்தான் தற்பொழுது இருக்கின்றது. இது தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் எந்தவொரு தேர்தலும் தற்பொழுது நடைபெறும் சாத்தியக்கூறு இல்லையா?**

பதில் : உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கூட இலங்கையில் ஒரு சட்டம் தான் இருக்கின்றது என்று தான் நான் அறிந்தேன். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சொல்வதைப் பார்த்தால் இரண்டு சட்டங்கள் நிர்வகிக்கின்றது போன்ற ஒரு தோற்றம் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தென்படுகின்றது அது என்னவென்றால் உண்மையில் தேர்தல் ஆணைக்குழு விளம்பரப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வேட்புமனுக்கள் அனைத்தும் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் இது சட்டபூர்வமாக செய்யப்படவில்லை என்று கூறுகின்றார். சட்டபூர்வமாக செய்யப்படாவிட்டால் ஐக்கிய தேசிய கட்சி இன்று தேர்தலிலே போட்டியிட்டிருக்கின்றது. எனவே அவர்களுக்கு உள்ள விடயம் என்னவென்றால் இந்த தேர்தலை நடாத்துவதற்கு தங்களுக்கு செல்வாக்கு இல்லை என்ற காரணத்தினால் ஏதோவொரு காரணத்தை வைத்து பிற்போடுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்பொழுது இன்னுமொரு செய்தி வந்திருக்கின்றது சட்டமா அதிபர் ஒரு விடயத்தை கூறியிருக்கின்றார் நீதிமன்றத்திற்கு இந்த தேர்தல் நடத்தவேண்டிய காலம் செப்டம்பர் மாதம் நடத்தியிருக்க வேண்டும் தேர்தல் ஆணைக்குழு அதை தவறிவிட்டது. எனவே இப்பொழுது இருக்கின்ற பொருளாதார இக்கட்டான சூழ்நிலையில் இந்த தேர்தலை நடத்துவது பொறுத்தமில்லை என்ற ஒரு விடயத்தை சட்டமாஅதிபர் இன்று நீதிமன்றிற்கு வழங்கியிருப்பதாகவும் ஒரு செய்தி வந்திருக்கின்றது. அது எந்தவகையில் உண்மை என்பது எனக்கு தெரியாது. எனவே இவ்வாறான நிலைமை வருகின்றபொழுது சட்ட ரீதியாகவே உள்ளூராட்சிமன்ற தேர்தலை நிறுத்துவதற்காக பல முனைப்புக்கள் காட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பது தான் உண்மை.

# நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் மூலிகைகளும் தொற்றுநீக்கி மூலிகைகளும்



டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

மூலிகைகள் நோய் எதிர்ப்புச் சக்தியை (Immunity Power) அதிகரிப்பதன் மூலம் நுண்ணங்கிகளுக்கு (Micro Organism) எதிராகத் தொழிற்படுகின்றன. அல்லது மூலிகைகளில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் நுண்ணுயிர் கொல்லிகளாக (Antibiotic) அல்லது கிருமித் தொற்று நீக்கிகளாக (Antiseptic) தொழிற்படுகின்றன. வேறுசில மூலிகைகளில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் தின்குழியச் செய்கையை (Phagocytic Action) பிறபொருளெதிரி உருவாக்கம் (Anti body formation) ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதன் மூலம் நோய்க் கிருமிகளை அழிக்கின்றன.



வேம்பு. மஞ்சள். உள்ளி. சந்தனம். வெங்காயம்.மரமஞ்சள். புங்கு. சாம்பிராணி. குங்கிலியம். பற்படாகம். மிளகு. வெற்றிலை. அறுகு. கோரை. கராம்பு. பனை. மருதோன்றி போன்ற மருத்துவ தாவரங்கள் கிருமித்தொற்று நீக்கி மூலிகைகளாகச் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

பச்சிலை மூலிகைகள். கீரை. பழங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்து நோய் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கைப்புச் சுவையுள்ள உணவுகளும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகின்றன. நூறு வயது முதிர்ந்த வேப்பம் பட்டை. வேப்பங்கள் வைரஸ். மலேரியா கிருமிகளுக்கு எதிராகத் தொழிற்படும் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. காயகற்ப மூலிகைகள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதாகவும். ஆரோக்கியமாக வாழ உதவுவதாகவும். நீண்ட ஆயுளைக் கொடுப்பதாகவும் அமைந்திருக்கின்றன.

துளசியானது காத்தல் தெய்வமான திருமாலுக்கு விருப்பமான மூலிகையாகும். துளசியானது நோய் வராமல் தடுப்பதுடன். தொற்றுக் கிருமிகள் உடலைத் தாக்காமல் பாதுகாப்பதுடன். விஷ ஜந்துகள் நெருங்கவிடாது காக்கும் தன்மை கொண்டதுடன். நோய் நிலையானது தீவிர நிலை அடையாமல் பாதுகாக்கும் மூலிகையாக அமைகின்றது. துளசிமாடம் வீடுகளில் வைத்து வழிபடும் முறை வீடுகளில் காணப்படுகின்றது. துளசியின் 4.5 இலைகளை நாள்தோறும் தேனில் ஊறப்போட்டு சாப்பிட்டுவந்தால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதுடன் வைரஸ் கிருமிகளுக்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தி சிறப்பாக அதிகரிப்பதோடு தடிமன். காய்ச்சல். பன்றிக்காய்ச்சல் போன்ற வைரசுக் கிருமித் தொற்றுக்கள் ஏற்படாமல் தடுக்கலாம். தடிமன் சளி ஏற்படும் போது துளசிச் சாற்றுடன் தேன் கலந்து உள்ளெடுத்தல் வேண்டும். மொசுமொசுக்கைச் சம்பல். இஞ்சிச் சம்பல் போன்றவற்றை உணவாகச் சாப்பிடும் போதும் வெற்றிலைச் சாறு தேனுடன் கலந்து இருமல். சளியுடன் கூடிய மூச்சுக் கஷ்டம் போன்ற நிலைகளில் பயன்படுத்தலாம்.

வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாறும் சேர்த்து பயன்படுத்தும் பொழுது நுரையீரல் சார்ந்த நோய்களைக் குணப்படுத்தும். வெற்றிலையில் எண்ணெய் தடவி அனலில் வாட்டி சிறு குழந்தையின் மார்பின் மேல் போடும் பொழுது மூச்சுக் கஷ்டம் தீரும். தூதுவளைச் சளித்தன்மை சம்பல். குறைவதை அவதானிக்கலாம்.

உள்ளி. வெங்காயச் சாறும் சிறப்பான கிருமித் தொற்று மூலிகைகளாக இருப்பதுடன் சளி. இருமல் போன்ற சுவாசத் தொகுதி நோய்களை (Respiratory Disease) குணப்படுத்துவதாகவும் அமைகின்றது. மிளகைத் தூளாக்கி கல்லாக்காரத் தூளையும் சேர்த்து பயன்படுத்தலாம்.

# உலக வலம்

## உக்ரைனுக்கு போர் விமானங்கள் வழங்கும் போலந்து



உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஓர் ஆண்டுக்கு மேலாக நீடித்து வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன.

உக்ரைனுக்கு போர் விமானங்களை வழங்க வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை வலியுறுத்தினார்.

இந்நிலையில் உக்ரைனுக்கு நான்கு மிக்-29 போர் விமானங்களை வழங்குவதாக போலந்து அறிவித்துள்ளது. இதையடுத்து உக்ரைனுக்கு போர் விமானங்களை வழங்கும் நோட்டோ அமைப்பில் உள்ள முதல் நாடு போலந்து ஆகும்.

## நியூஸிலாந்தில் பாராளுமன்ற சாதனங்கள் மூலம் TikTok ஐ அணுகத் தடை



நியூஸிலாந்து அதிகாரிகளும் TikTok குறித்து ஒரு முடிவை எடுத்துள்ளனர்.

அதன்படி, நியூஸிலாந்து பாராளுமன்றத்துடன் இணைக்கப்பட்ட சாதனங்கள் மூலம் டிக்டோக்கை அணுக தடை விதிக்க முடிவு செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான தீர்மானங்களை பல நாடுகள் எடுத்துள்ளதோடு, தமது தரவுகளின் பாதுகாப்பு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## நேபாள பிரதமரின் டிவிட்டர் கணக்கு ஹேக் செய்யப்பட்டுள்ளது

நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹாலின் அதிகாரப்பூர்வ டிவிட்டர் கணக்கு ஹேக் செய்யப்பட்டுள்ளது. நேபாள நாட்டு பிரதமரின் அதிகாரப்பூர்வ டிவிட்டர் கணக்காக பிஎம்ஓ நேபாளம் செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில், அந்த பக்கம் இன்று அதிகாலை ஹேக் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்த டிவிட்டர் பக்கத்தின் முகப்பு படமாக பிரதமர் புஷ்ப கமல் தஹால் புகைப்படம் இருந்த நிலையில், வேறு புகைப்படம் மாற்றப்பட்டும் பெயரும் மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து, அரசுக்கு சம்பந்தமில்லாத செய்திகளை ரீட்வீட் ஆகியுள்ளது. இந்நிலையில், பிரதமரின் அதிகாரப்பூர்வ டிவிட்டர் கணக்கை மீட்கும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.



## எவரெஸ்ட் சிகரம் கிருமிகள் நிறைந்த இடம்

எவரெஸ்ட் சிகரம் கிருமிகள் நிறைந்த இடம் என்று அமெரிக்காவின் கொலராடோ போல்டர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுரை ஆர்க்டிக், அண்டார்டிக், ஆல்பைன் ஆராய்ச்சி என்ற அறிவியல் இதழில் வெளியிடப்பட்டது.

கடல் மட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான மீற்றர் உயரத்தில், இமயமலை என்று அழைக்கப்படும் எவரெஸ்ட் சிகரம் ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் பலர் நோய்வாய்ப்படுகிறார்கள்.

இந்த நோய்வாய்ப்பட்டவர்களிடமிருந்து அனைத்து நச்சுகளும் குளிர்ந்த காற்றில் சிதறடிக்கப்படுகின்றன. மனிதர்களை நோயுறச் செய்யும் பெரும்பாலான வைரஸ்கள் இமயமலைப் பகுதியின் குளிரில் படிவதாக விஞ்ஞானிகள் குழு விளக்கமளித்துள்ளது.

## உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்தது






உலகச் சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை அன்று (17) 70 அமெரிக்க டொலர் என்ற எல்லையை எட்டியுள்ளது.

அதன்படி, அன்று காலை WTI கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 68.82 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ள அதேவேளை, பிரண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.16 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

## சிறந்த விமான நிலையமாக சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையம்



உலகின் சிறந்த விமான நிலையமாக சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அன்று (15) நெதர்லாந்தில் நடைபெற்ற Skytrax World Airport Awards இல் உலகின் சிறந்த விமான நிலையமாக சாங்கி விமான நிலையம் விருது பெற்றதுடன், சிறந்த உணவு வசதிகள் கொண்ட விமான நிலையம் மற்றும் உலகின் சிறந்த ஓய்வு வசதிகள் கொண்ட விமான நிலையம் என விருது வழங்கப்பட்டது.

முதல் இருபது விமான நிலையங்களில் கத்தாரின் டோஹா ஹமாத் விமான நிலையம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. மூன்றாவது இடத்தை ஜப்பானின் டோக்கியோ ஹனேடா பிடித்துள்ளது.

# விளையாட்டு

## இலங்கை கால்பந்து தடைக்கு 197 நாடுகள் வாக்களிப்பு



இலங்கைக்கு எதிரான சர்வதேச கால்பந்து தடைக்கு ஆதரவாக 197 நாடுகள் வாக்களித்துள்ளன. ருவாண்டாவின் கிகாலி நகரில் நடைபெற்ற உலக கால்பந்து சம்மேளனத்தின் பொதுச் சபையில் இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 208 நாடுகள் கலந்து கொண்ட இந்த பொதுச் சபையில் இலங்கைக்கு சர்வதேச கால்பந்து தடை விதிக்க 197 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன.

விளையாட்டு அமைச்சின் முறையற்ற செல்வாக்கு, விளையாட்டு சுதந்திரத்தை மீறுதல், தன்னிச்சையாக புதிய விதிமுறைகளை விதித்தல் போன்ற காரணங்களால் பல நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களித்துள்ளன.

## வடக்கின் சமர் ஒருநாள் போட்டி – 21 ஓட்டங்களால் வென்றது சென். ஜோன்ஸ்

யாழ். சென். ஜோன்ஸ் மைதானத்தில் வெள்ளிக்கிழமை (17) நடைபெற்ற வடக்கின் சமர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரியை 21 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சென். ஜோன்ஸ் சுவீகரித்தது. அருள்சீலன் நிதானத்துடன் பெற்ற அரைச் சதம், அன்ரன் அபிஷேக்கின் சகலதுறை ஆட்டம், யோகதாஸ் விதுஷன் பதிவு செய்த 4 விக்கெட் குவியல் என்பன சென். ஜோன்ஸின் வெற்றிக்கு வழிவகுத்தன. இந்த வெற்றி மூலம் 116ஆவது வடக்கின் சமர் 3 நாள் போட்டியில் அடைந்த தோல்வியை சென். ஜோன்ஸ் நிவர்த்தி செய்துகொண்டது. அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த சென். ஜோன்ஸ் 49.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 217 ஓட்டங்களைக் குவித்தது. சென். ஜோன்ஸின் முதல் 6 வீரர்கள் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய போதிலும் அவர்களால் நீண்ட நேரம் ஆடுகளத்தில் நிலைத்திருந்து கணிசமான ஓட்டங்களைப் பெற முடியாமல் போனது. அண்டர்சன் சச்சின் கனபதி (7), மஹேந்திரன் கின்துஷன் (27), சங்கீத் க்றேம் ஸ்மித் (14), நேசகுமார் எபநேசர் ஜெஸியல் (12), அணித் தலைவர் கமலபாலன் சபேசன் (2), யோகதாஸ் விதுஷன் (13) ஆகிய ஆறு பேரும் ஆட்டமிழக்க சென். ஜோன்ஸ் 27.2 ஓவர்களில் 106 ஓட்டங்களைப் பெற்று மிக மோசமான நிலையில் இருந்தது.



இந் நிலையில் அருள்சீலன் கவிஷான், அன்டன் அபிஷேக் ஆகிய இருவரும் ஜோடி சேர்ந்து 7ஆவது விக்கெட்டில் 51 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு கௌரமான நிலையில் இட்டனர். அபிஷேக் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த சோற்ப நேரத்தில் அன்டன் அமலதாஸ் (7) களம் விட்டகன்றார். (165 - 8 விக்.) எனினும் அருள்சீலன் கவிஷான் தொடர்ந்து திறமையாகத் துடுப்பெடுத்தாடி 9ஆவது விக்கெட்டில் ஜெயச்சந்திரன் அஷிநாத்துடன் இணைந்து 43 ஓட்டங்களைப் பகிர்ந்து சென். ஜோன்ஸின் மொத்த எண்ணிக்கை 200ஐக் கடக்க உதவினார். ஜெயச்சந்திரன் அஷிநாத் 19 ஓட்டங்களைப் பெற்றதுடன் கடைசியாக ஆட்டம் இழந்த முர்ஃபின் ரெண்டியோ 3 ஓட்டங்களைப் பெற்றார். அருள்சீலன் கவிஷான் மிகவும் பொறுப்புணர்வுடன் துடுப்பெடுத்தாடி 96 பந்துகளை எதிர்கொண்டு 4 பவுண்டறிகளுடன் 64 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் சதாகரன் சிமில்டன் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ரஞ்சித்குமார் நியூட்டன், நிஷாந்தன் அஜய், விக்னேஸ்வரன் பருதி, தகுதாஷ் அபிலாஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 218 ஓட்டங்கள் என்ற சுமாரான மொத்த எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 46.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது. சென். ஜோன்ஸைப் போன்றே யாழ். மத்திய கல்லூரி அணியிலும் முதல் அறுவரில் ஐவர் துடுப்பாட்டத்தில் கோட்டை விட்டனர். ஜெகதீஸ்வரன் விதுஷன் (2), ரஞ்சித்குமார் நியூட்டன் (8), மதீஸ்வரன் சஞ்சயன் (9), நிஷாந்தன் அஜய் (19), அணித் தலைவர் ஆனந்தன் கஜன் (0) ஆகிய ஐவரும் ஆட்டமிழக்க மொத்த எண்ணிக்கை 60 ஓட்டங்களாக இருந்தது. (60 - 5 விக்.) எனினும் சதாகரன் சிமில்டன், டெனியல் போல் பரமதயாளன் ஆகிய இருவரும் மிகவும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 6ஆவது விக்கெட்டில் 74 ஓட்டங்களைப் பகிர்ந்து யாழ். மத்திய கல்லூரிக்கு தெம்பூட்டினர். ஆனால் இருவரும் 22 பந்துகள் இடைவெளியில் ஆட்டம் இழந்தனர். (147 - 7 விக்.) டெனியல் போல் 6 பவுண்டறிகளுடன் 40 ஓட்டங்களையும் சதாகரன் சிமில்டன் 6 பவுண்டறிகளுடன் 50 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களைத் தொடர்ந்து தகுதாஸ் அபிலாஷ் 3 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். (158 - 8 விக்.) அடுத்து 9ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த சகாதேவன் சயந்தன், சுதர்ஷன் அனுஷாந்த் ஆகிய இருவரும் 35 ஓட்டங்களைப் பகிர்ந்து எதிரணிக்கு சவால் விடுத்தனர். ஆனால், இருவரும் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். சகாதேவன் சயந்தன் 27 ஓட்டங்களையும் சுதர்சன் அனுசாந்த் 16 ஓட்டங்களையும் பெற்றனர். விக்னேஸ்வரன் பருதி ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் அன்ரன் அபிஷேக் 8.4 ஓவர்களில் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் யோகதாஸ் விதுஷன் 9 ஓவர்களில் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ஜெயச்சந்திரன் அஷினாத் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.


















# வேலை வாய்ப்பு

**வவுனியாவில் இயங்கி வரும்
தினப்புயல் வாராந்த பத்திரிகைக்கு
உதவி ஆசிரியர் மற்றும்
பக்க வடிவமைப்பாளர்கள் தேவை**

**விண்ணப்பிப்போர் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக்கோவையுடன்
பதவியையும் குறிப்பிட்டு அனுப்பவும்**

thinappuyal2014@gmail.com

**மேலதிக தொடர்புகளுக்கு : 077 6906182 , 077 8195947**

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 19.03.2023 அன்று வெளியிடப்பட்டது.